# கலைச்செல்வி

ஆடி
1962



*சந்தா நேயர்களுக்கு*

# இலவச தென் இந்தியப் பிரயாணம்

1962ம் ஆண்டு புரட்டாதிமாதம் 30ந் திகதி வரை "கலைச்செல்வி" யின் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளும் அன்பர்களுள் அதிர்ஷ்ட சாலியான ஒருவருக்குத் தென் இந்தியா செல்லும் வாய்ப்பு உண்டு.

"கலைச்செல்வி"யின் ஆண்டுச்சந்தாவாகிய நான்கு ரூபாவினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டை அன்பர்கள் கவனமாக வைத்திருக்கவேண்டும். ஐப்பசி மாதம் முதலாந் திகதி, சந்தா நேயர்களின் பெயர்கள் குலுக்கிப் போடப்பட்டு, அதிர்ஷ்டசாலி பொறுக்கி எடுக்கப் படுவார்.

நேயர்கள் முன்னிலையில் இத்தேர்தல் நடைபெறும். தேர்ந்தெடுக்கப் படுபவரை எமது செலவில்தென் இந்தியாவிற்கு அழைத்துச் சென்று சரித்திர, சமய சம்பந்தமான இடங்களைக் காட்டுவதுடன், சிறந்த எழுத்தாளர்களையும் சினிமா நடிகர்களையும் அறிமுகம் செய்தும் வைப்போம்.

மறந்துவிடாதீர்கள், நீங்கள் செலுத்த வேண்டிய பணம் ஆக நான்கே நான்கு ரூபா தான். இந்தப்பணத்தை அனுப்பினால், 12 மாதங்களுக்குத் தொடர்ந்து 'கலைச்செல்வி' யைப் படித்துமகிழ்வதுடன் தென் இந்திய இயற்கை அழகுகளையும் பார்த்து மகிழலாம்,

இன்றே உங்கள் சந்தாப் பணமாகிய நான்கு ரூபாவையும் காசுக் கட்டளை அல்லது அஞ்சற்கட்டளையில்

காசு பெறுபவர் : நிர்வாகி, கலைச்செல்வி
காசு பெறுமிடம் : செட்டிகுளம்

என்று தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி:-

## கலைச்செல்வி

பாலன் வெளியீட்டு நிலையம்,

செட்டிகுளம், இலங்கை.



## கலைச்செல்வி

# கலைவிழா

### ஆவணி: 1962.

செந்தமிழ் வல்லுனர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள்; வவுனியா வட்டாரப் பாடசாலை மாணவ மாணவியரின் கதம்ப நிகழ்ச்சிகள்; பரிசளிப்பு.

கொக்குவில் கலாபவன மாணவிகளின் நடன நிகழ்ச்சி.

திருநெல்வேலி அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினர் அளிக்கும் இசைக்கச்சேரி.

நடன ஆசிரியர் திரு. ஏ. சுப்பையா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தல்.

இன்னும் பல கவர்ச்சிமிக்க கலை நிகழ்ச்சிகள்.

எழுத்தாளர்கள், சந்தாதாரர்கள் விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள் — அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவிழாச் செயற்குழு

வவுனியா.

# கீதாயோகம்

[ கவியோகி சுத்தானந்த மகரிஷியின் அற்புத விளக்கம் ]

கீதை உலகப் பெருநூல். கண்ணன் விஜயன் மூலம் மனித சமுதாயத்திற்கு அளித்த 'திருவாசகம்'. எல்லாச் சமயங்களுக்கும், எல்லா யோகங்களுக்கும் பொருந்திய சமயோக சித்தாந்த — சர்வாத்ம வேதாந்தப் பொக்கிஷம். இதற்கு யோக வழியால், சித்தாந்த உணர்வால், வேதத்தை அடிப்படையாகக்கொண்டு அனுபூதி உரை எழுதியுள்ளார் நமது கவியோகி. கீதையைச்சுற்றி அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம், பேதாபேதம் என்ற நூறு சண்டைகள் குமுறுகின்றன. இவற்றிற்கு இடமேயில்லாமல் கண்ணன் கருத்தைத் தெளிவாகத் தருகிருர் தவமுனிவர் சுத்தானந்தர். இதில் கீதையின் மூலசுலோகங்கள் அப்படியே தமிழ் அடையாள எழுத்துக்களில் உள்ளன. கீதா சாரத்தைத் தமிழ்ச் செய்யுளாக முன்னே பாடியிருக்கிருர் நமது மகரிஷி.

உங்கள் பிரதிக்கு

முன்பணம் அனுப்பி முந்திக்கொள்ளுங்கள்.

**விலை ரூபா 2 அணு 8.**

தபாற்செலவு **அணு 8.**

மூன்று ரூபா போஸ்டல் ஆடர் அனுப்பி

நேராகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கிடைக்குமிடம் :

சுத்தானந்த நூலகம்

(யோக சமாஜம்)

அடையாறு, சென்னை.

# யோக சமாஜம்

வவுனியா,

இலங்கை.



# கலைச்செல்வி
# கலைவிழா
## ஆவணி: 1962.

---

செந்தமிழ் வல்லுனர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள்; வவுனியா வட்டாரப் பாடசாலை மாணவ மாணவியரின் கதம்ப நிகழ்ச்சிகள்; பரிசளிப்பு.

கொக்குவில் கலாபவன மாணவிகளின் நடன நிகழ்ச்சி.

திருநெல்வேலி அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினர் அளிக்கும் இசைக்கச்சேரி.

நடன ஆசிரியர் திரு. ஏ. சுப்பையா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தல்.

இன்னும் பல கவர்ச்சிமிக்க கலை நிகழ்ச்சிகள்.

எழுத்தாளர்கள், சந்தாதாரர்கள் விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள் — அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவிழாச் செயற்குழு

வவுனியா.

# கீதாயோகம்

[ கவியோகி சுத்தானந்த மகரிஷியின் அற்புத விளக்கம் ]

கீதை உலகப் பெருநூல். கண்ணன் விஜயன் மூலம் மனித சமுதாயத்திற்கு அளித்த 'திருவாசகம்'. எல்லாச் சமயங்களுக்கும், எல்லா யோகங்களுக்கும் பொருந்திய சமயோக சித்தாந்த — சர்வாத்ம வேதாந்தப் பொக்கிஷம். இதற்கு யோக வழியால், சித்தாந்த உணர்வால், வேதத்தை அடிப்படையாகக்கொண்டு அனுபூதி உரை எழுதியுள்ளார் நமது கவியோகி. கீதையைச்சுற்றி அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம், பேதாபேதம் என்ற நூறு சண்டைகள் குமுறுகின்றன. இவற்றிற்கு இடமேயில்லாமல் கண்ணன் கருத்தைத் தெளிவாகத் தருகிறார் தவமுனிவர் சுத்தானந்தர். இதில் கீதையின் மூலசுலோகங்கள் அப்படியே தமிழ் அடையாள எழுத்துக்களில் உள்ளன. கீதா சாரத்தைத் தமிழ்ச் செய்யுளாக முன்னே பாடியிருக்கிறார் நமது மகரிஷி.

உங்கள் பிரதிக்கு

முன்பணம் அனுப்பி முந்திக்கொள்ளுங்கள்.

**விலை ரூபா 2 அணா 8.**

தபாற்செலவு **அணா 8.**

மூன்று ரூபா போஸ்டல் ஆடர் அனுப்பி

நேராகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கிடைக்குமிடம் :

## சுத்தானந்த நூலகம்

**( யோக சமாஜம் )**

அடையாறு, **சென்னை.**

# யோக சமாஜம்

**வவுனியா,**

இலங்கை.

# வளருந்தமிழ்

மலர்: இளம் எழுத்தாளர் சங்க முதலாவது ஆண்டு மலர்; கிடைக்குமிடம்: செயலாளர், இ. எ. சங்கம்; புத்தூர்.

சென்ற ஓராண்டு காலமாக இலக்கியக் கூட்டங்கள் நடாத்தியும் கதை, கவிதை, கட்டுரை, நாடகப் போட்டிகள் வைத்தும் எழுத்தாளரை ஊக்குவித்த இளம் எழுத்தாளர் சங்கத்தினர் தமது முதலாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி அழகிய ஒரு மலரை வெளியிட்டுள்ளனர். மலரில் வெளியாகிய கவிதைகளுள் பா. சத்தியசீலனின் கவிதை சொல்லெளிமையும் கருத்தாழமும் நிறைந்து உயர்ந்து விளங்குகின்றது. மயிலன், எருவில் மூர்த்தி, ஆடலிறை ஆகியோரின் கவிதைகளும் குறிப்பிடக்கூடியவை. "வாடிய மலர்" (சண்முகவடிவேல்) நாடகம் சாதாரணமானது. அதில் எதையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியவில்லையே என்பது ஒரு குறை. பெனடிக்ற் பாலனின் "இலக்கியம் ஏன்?"-பூரணமான விடையைத் தரவில்லை என்பது என் கருத்து. 'இயற்கையும் கவியும்' (சு. துரைசிங்கம்) பழக்கப்பட்ட தலைப்பாயினும் படிக்கச் சுவையாக இருக்கின்றது. கதைகள் மூன்றும் சோடை போகவில்லை. "வாய்ச் சொல் வீரர்"களைச் சாடுகின்றது துருவன்' எழுதிய "சொல்லும் செயலும்". பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் கற்பு வேண்டும் என்பதைக் காட்ட முயன்று ஓரளவிற்கு வெற்றியும் பெற்றுள்ளார் கலா. பரமேஸ்வரன் தன் 'ஜோதி'' யில். காதலன் கைவிட்டோடி வேறொருத்தியை மணக்க, காதலி "ஆண்மை''யற்ற ஒருவனுக்கு மாலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இந் நிகழ்ச்சியை நினைக்கும் போது ஏற்படும் சோக உணர்ச்சி படிக்கும்போது ஏற்படாவிட்டாலும் "சிதைவு" கதையைச் சுவையாகச் சொல்ல முயன்றுள்ளார் சு. மகாலிங்கம். பிரபல எழுத்தாளர்களினதும், பத்திரிகையாசிரியர்களினதும் வாழ்த்துக்கள், சங்கம் பிறந்த கதை, சங்கத்தின் சாதனைகள், செயற்குழுவினரதும் பரிசு பெற்றோரதும் புகைப்படங்கள், எழுத்தாளர்களின் முகவரிகள்–ஆகியவற்றுடன் வெளியாகிய இம் மலர் இலக்கிய இரசிகர்களின் கைகளில் இருக்கவேண்டியது அவசியம்.


## கலைச்செல்வி

## கலைவிழா மலர்

ஓவிய மன்னர் மாதவனின் மூவர்ண அட்டையுடனும் பிரபல எழுத்தாளர்களின் படைப்புகளுடனும் வெளியாகின்றது,

விலை 50 சதம்

பாலன் வெளியீடு, செட்டிகுளம்.

# எழுத்துலகில்.....................!

இளம் எழுத்தாளர் சங்கத்தின் ஆண்டுவிழா "ஈழநாடு" அரியரத்தினம் தலைமையில் 24-6-62 ஞாயிறன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தினரின் மலரை கலைச்செல்வி ஆசிரியர் வெளியிட்டுவைத்தார். சி. உ. சோமசேகரம், இளங்கீரன், எஸ். பொன்னுத்துரை, க. கைலாஸபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். எழுத்தாளர் புகைப்படக் கண்காட்சியும், புத்தகக் கண்காட்சியும், கா. சிவத்தம்பியின் தலைமையில் "ஏன் எழுதுகிறோம்?" கருத்தரங்கமும் "தான் தோன்றிக் கவிராயர்" தலைமையில் "பாடிப் பயனென்" கவிதையரங்கமும் மகாநாட்டில் இடம் பெற்றன. ஏ. ரி. பொன்னுத்துரையின் "வருஷம் பிறந்து முன்னம் முன்னம்" – நாடகத்துடன் விழா இனிது நிறைவேறியது.

⚜ ⚜ ⚜

இலங்கையர்கோன் அவர்களின் பிறந்த நாளாகிய செப்டம்பர் ஒன்பதாந்தேதியை எழுத்தாளர் தினமாகக் கொண்டாடும்படி தீவுப் பகுதி எழுத்தாளர் சங்கம் ஈழத்து எழுத்தாளர்களையும் எழுத்தாளர் மன்றங்களையும் கேட்டுள்ளது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் யாழ்ப்பாணம் கலைப்பெருமன்றமும் தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் நினைவு நாளை மிகச் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

⚜ ⚜ ⚜

"யாழ் நூல்" ஆசிரியர், முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளின் நினைவு தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாட மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பெருமுயற்சி எடுத்து வருகின்றது.

⚜ ⚜ ⚜

புதிய நாடகாசிரியர் 'ஐயன்னா' எழுதிய "நாடகமாலை" நாடகத் தொகுதியைக் கந்தரோடை ஜன சமூக நிலையத்தினர் மிக விரைவில் வெளியிடவிருக்கின்றனர்.

⚜ ⚜ ⚜

கலைச்செல்வி நடாத்திய ஆயிரம் ரூபா நாவல் போட்டிக்கு வந்த நாவல்கள் நீதிபதிகளின் பரிசீலனையிலிருக்கின்றன. மிக விரைவில் முடிவுகளை அறிவிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.


சண்முக தொழிற்சாலை.
பருத்தித்துறைவீதி.
நல்லூர்.
ரதீசோப்
ரதீசோப்
SHANMUGHA INDUSTRIES
274 PT PEDRO ROAD.
NALLUR.
Colombo Studio

சிங்கள முன்னணி எழுத்தாளருள் ஒருவரான அன்பர் சிறில் பி. பெரேரா (சில்பி) அவர்கள் இக் காலத் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி எழுதிய ஒரு குறிப்பின் தமிழாக்கம் இது. 14-10-61 திகதியிட்ட ''திவயின'' சிங்கள வார இதழின் ''உரகல'' பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ் எழுத்தாளர்கள்

சில்பி

முன்னொரு சந்தர்ப்பத்தில் இப்பந்தியில் சிங்கள எழுத்துலக முன்னோடிகளைப் (Avant Garde) பற்றிச் சில வார்த்தைகள் எழுதினேன். இன்று, தற்காலப் 'பரிசோதனை' எழுத்தாளர் குழுவைச் சேர்ந்த சில இலங்கைத் தமிழ் எழுத்தாளரை இப்பந்தியில் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளேன்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட சமய, சமூகக் கோட்பாடுகளோடும், நம்பிக்கைகளோடும் முரண்பட்டு நிற்கும் புதிய சந்ததித் தமிழ் எழுத்தாளர்கள், இதே சந்ததியைச்சேர்ந்த சிங்கள எழுத்தாளரினும்பார்க்க, ஒரு வகையில் ஒதுக்கப்பட்டவராய் இருக்கின்றனர். இந்நாட்டில் பிறந்து, இந்நாட்டு மக்கள் வாழ்வைத் தம் கற்பனையின் பொருளாய்க்கொண்டு இந்நாட்டிலேயே தம் சிருஷ்டிப்பணியில் ஈடுபடும் இவ்வெழுத்தாளர்கள் இந்நாட்டு வாழ்வின் ஐக்கியமான ஒரு பகுதியாக ஏற்கப்பட்டுள்ளதாகப் படவில்லை. பெரும்பான்மை இனம் கலாச்சார ரீதியில் அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டது; தேசிய, சமூகரீதியில் அவர்கள் வேண்டாத அந்நியர்களாய் இந்நாட்டில் கருதப்படுகின்றனர்; விபரீத மனங்கொண்ட அரசியல் வாதிகளால், தீவிரவாதிகளால் வெறியர்களால் அவர்கள் தூற்றப்படுகிறார்கள். அதேசமயம், அவர்கள் தம் பண்பாட்டு மரபுகளோடும், சம்பிரதாய நம்பிக்கைககளோடும் கோட்பாடுகளோடும் முரண்பட்டுக் கிளர்ந்தெழுகின்றனர்.

இந்நிலைமைகளின் காரணமாக இவ்வெழுத்தாளர் சந்ததியிடத்திருந்துதான் கூடிய பொருள் பொதிந்த உயிருள்ள இலக்கியம் தோன்றுமெனச் சில சமயங்களில் எனக்குத் தோன்றுகிறது. இச்சக்திகளால் சூழப்பட்ட இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் வியத்தகு துணிவுடனும் வெல்ல முடியா திடத்துடனும் அவற்றை எதிர்த்துப் போராடுகின்றனர்.

இன்று உண்மையை, கலாச்சார உறைவிடத்தை, சமூக ஜீவநதியைத்தேடி யாத்திரைசெய்யும் இலங்கையின் புதிய சந்ததித் தமிழ் எழுத்தாளர், இலக்கியத்தைப்போற்றி அனுபவிக்கும் எல்லோரதும் உயர்ந்த மதிப்புக்குரியவராவர் என இங்கு கூறவிரும்புகிறேன்.

ஆனால், இப் 'புது மரபு' சிங்கள எழுத்தாளரோ இவ்வளவு ஒரேயடியாக ஒதுக்கப்பட்டவராயில்லை. இப்புதிய சந்ததியின் தமிழ், சிங்கள எழுத்தாளர்கள் சந்தித்து, உரையாடி, ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கொரு வழியிருந்தால் அது பரஸ்பர நன்மை பயப்பதாயிருக்கு . அவர்கள் தனித்தனியே நடத்திவரும் பரிசோதனைகளிலிருந்து அறிந்துகொள்ளக்கூடியது எவ்வளவோ இருக்கக்கூடும்

பரிசோதனை எழுத்தாளரான புதிய சந்ததியை நினைக்கையில் பின்வரும் தமிழ் எழுத்தாளர், கவிஞர் நாடகாசிரியர்களின் பெயர்கள் மனதில் எழுகின்றன, எஸ். பொன்னுத்துரை. டொமினிக் ஜீவா, கே. டானியல், பவானி, வரதர் ஏ. ஜே. கனகரத்ன, எஸ். கணேசலிங்கன், வ. அ. இராசரத்தினம் காவலூர் இராசதுரை. "சொக்கன்" "சிற்பி" (சரவணபவன்) எஸ். இளங்கீரன், "புதுமைப்பிரியை" "சாந்தினி" கனக செந்திநாதன்.

இவர்களுள், எஸ். பொன்னுத்துரை தமது கருத்தை வெளியிடுவதற்குப் பிரதானமாகச் சிறுகதையைக் கையாளும் எழுத்தாளராவர். தமிழ்ச் சிறுகதை உத்தியில் பல பரிசோதனைகள் நிகழ்த்தியுள்ளார். வாழ்க்கையை அதன் அம்மணக்கோலத்தில் பார்ப்பதற்கும் வாழ்க்கையின் சிற்றின்ப அம்சத்தைத் தத்ரூபமாகவும் ஓரளவு அடக்கத்துடனும் ஆய்வதற்கும் அவர் பின்வாங்குவதில்லை என்று சொல்லப்படுகின்றது. பரிசுத்தவாதிகளால் கண்டிக்கப்படும் புதிய எழுத்தாளர் சந்ததியைச் சேர்ந்தவர் இவர்.

சாகித்திய தினத்தையொட்டிச் சாகித்திய மண்டலத்தால் வழங்கப்படும் சிறுகதைப் பரிசை இம்முறை டொமினிக் ஜீவா பெற்றார். இவரும் தமது இலக்கிய சிருஷ்டிக்கு ஏற்ற அமைப்பாகச் சிறுகதையையே கையாளுகிறார். தமிழரிடையே சிறுபான்மைச் சமூகமொன்றைச் சேர்ந்த டொமினிக் ஜீவா, வாழ்க்கையின் பல அம்சங்களோடு முரண்பட்டுநிற்கும் எழுத்தாளராவர். இவர் மார்க்ஸீயத்தைத் தமது வாழ்க்கைத் தத்துவமாக ஏற்றுள்ளார். இஸ்லாமியரான எஸ். இளங்கீரன் நாவலாசிரியராவர். இவர் யாழ்ப்பாணத்தையும் அதன் மக்களையும் நன்குணர்ந்து கருணையோடு எழுதுகிறார்.

தமது பரீக்ஷார்த்தப் படைப்புகளின் பொருளுக்கு அறிவுத் தன்மையை அளிக்க முயலும் தமிழ் எழுத்துலக முன்னோடிகளுள் இளம் எழுத்தாளர்களுள் முன்னிற்பவருள் பவானி ஒருவர், இவர் சிறுகதை எழுத்தாளரும் கவியுமாவர். சமீபத்தில் 'கலைச்செல்வி' என்னும் தமிழ் இலக்கிய சஞ்சிகையில் பிரசுரமான இவரின் "மன்னிப்பாரா ?" என்னும் சிறுகதை தமிழ் இலக்கிய உலகிலே ஒரு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இக்கதை சம்பிரதாயமான ஹிந்து சமூகத்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒழுக்கநெறியின் மிகப் பலவீனமான நிலைகளைத் தொடுவதோடு அந்நெறியிலடங்கிய பாசாங்கை, தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்ளும் தன்மையை வெளிக்காட்டுகிறது, இலங்கையின் தற்கால

ஹிந்துசமூகத்தின் ஏற்றுக்கொள்ளப் பட்ட கோட்பாடுகளை எதிர்த்துத் தமிழ் எழுத்துலக முன்னோடிகள் செய்யும் கிளர்ச்சியின் சின்னமாய் பவானியின் ''மன்னிப்பாரா?'' விளங்குகிறது.

''புதுமைப் பிரியை''யும் 'சாந்தினி'யும் புதிய சந்ததியைச் சேர்ந்த பெண் எழுத்தாளராவர். கனக. செந்திநாதனும் ஏ. ஜே. கனகரத்தினாவும் அவர்களிடையே பிரபல இலக்கிய விமர்சகராவர்.

புதிய உத்திகளை, சருத்தை வெளியிடப் புதிய அமைப்புகளைக் காணமுயலும் தமிழ் எழுத்தாளரின் பரிசோதனைகளில் தற்கால மேலைத்தேய இலக்கியத்தின் பாதிப்புத் தெளிவாகத் தெரிகின்றது.

(Column "Uragala" in the Sinhala weekly "Divaina" of October 14, 1961 by "Silpi")

## யாழ். த: எ. சங்கம்.

யாழ். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆண்டு நிறைவுக் கூட்டம் சென்ற **30-6-62.**ல் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. இ. மகாதேவா தலைமை வகித்தார். புத்தாண்டிற்கு திரு. க. தி. சம்பந்தன் தலைவராகவும் திருவாளர்கள் திரு. ச. வரதராசன், மு. செல்லையா, யாழ்ப்பாணன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், திரு. இ. மகாதேவா செயலாளராகவும் திரு. சி. சரவணபவன் துணைச்செயலாளராகவும் திரு க. வை. தனேஸ்வரன் பொருளாளராகவும் திருவாளர்கள் கனக. செந்திநாதன், சு. வே, அமுது, நாவேந்தன், தெ. செ. நடராஜா, நந்தி, தில்லைச்சிவன், புதுமைலோலன், இராஜநாயகன், ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கையிலுள்ள சகல எழுத்தாளர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்று நிறுவப்படவேண்டும்; அ. செ. முருகானந்தன் அவர்களின் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு அதன் வருவாய் முழுவதையும் நோயினால் கஷ்டப்படும் அவருக்குக் கொடுக்க வேண்டும், பத்திரிகை மசோதாவை அரசாங்கம் கொண்டுவரக் கூடாது; முதலிய முக்கிய தீர்மானங்கள் ஏகமானதாக நிறைவேற்றப் பட்டன,

தொடர்ந்து நடைபெற்ற ''தமிழ் எங்கள் ஆயுதம்'' கவிதைத்தொகுதி வெளியீட்டு விழாவில் திரு. சீ ஸ்ரீநிவாசன் M. A., திரு. சு. இராசநாயகன் B. A., வித்துவான் திரு. க. ந. வேலன் ஆகியோர் விமர்சனச் சொற்பொழிவு நிகழ்த்தினர். இசைப்புலவர் திரு. செல்லத்துரை, திருமதி. ஸ்ரீதேவி பத்மநாதன் ஆகியோர் இசைவிருந்தளித்தனர்.

நமது சகோதர இனமாகிய சிங்களவர்களுள் சிந்தையைத் தொடும் கதைகள் எழுதும் எழுத்தாளர்கள் பலருளர். காதல் சூழ்ச்சி ஒன்றைச் சுவையான சிறுகதையாக்கி இருக்கின்றார் த ஆப்றூ

# நண்பன்

சிங்கள மூலம்: லியானி த ஆப்றூ
தமிழில்: அன்ரனி பெர்னாண்டோ

"எனக்கு இன்றும் ஸ்ரீயானியிடமிருந்து கடிதமொன்று"... நான் சொன்னேன்.

கடிதத்தைப் பிரிக்கும்போது உள்ளிருந்து ஒரு படம் கீழே விழுந்தது. அருகிலிருந்த ஜினசேன உடனே அதைக் கையிலெடுத்தான்.

"ஆ! இதென்ன புதுமை? இவள் தானா நீர் சொல்லும் ஸ்ரீயானி?

"ஆம்..."

"என்னப்பா இவளை எனக்கு நன்றாகத் தெரியுமே. அந்தப் புத்த கோயிலுக்குப் பக்கத்து வீட்டில் தானே இருக்கிறாள்..."

"அதுதான் சரி..."

"அவள் புத்தகோயிலுக்கு பக்கத்திலிருப்பதாக நீர் சொல்லவேயில்லையே...? அதில்லை...... நீர் உண்மையாகவே ஸ்ரீயானியைக் காதலிக்கிறீரா?

"ஆம்"

"என்றாவது ஸ்ரீயானியை மணப்பதாக எண்ணமோ?"

"ஆம்"

"ஆ! உமது சுகதுக்கங்களில் பங்குகொள்ளும் ஒரே நண்பன் நான் என்பது தெரியும்தானே? இனி நான் தெரிந்துகொண்டே உம்மைத் தொந்தரவில் விழவிடுவதெப்படி?" ஜினசேன கேட்டான்.

"என்ன தொந்தரவு?"

"நீர் குழப்பமடையவோ மனதைப் பழுதாக்கிக்கொள்ளவோ வேண்டாம்... அந்தச் ஸ்ரீயானி நீர் நினைத்திருப்பதைப்போன்ற ஒருத்தியல்ல... நான் இதைச் சொல்வது உமது நன்மைக்கே. ஸ்ரீயானி அடுத்தவீட்டுத் தனபாலாவுடன் நேசமாயிருந்தாள்."

"அவள் என்னிடம் அதைப் பற்றிச் சொன்னாள், அது முடிந்ததுதானே."

"முடிந்ததுதான், தனபாலா போனபிறகு சுமனசேனயோடு ஆடினாள். பிறகு பிரேமசிரி. பிரேமசிரியின் வேலைபோனதே ஸ்ரீயானியாற்தான். அதிகதூரம் போகவேண்டாம். அந்தச் சந்தியில்போய் ஸ்ரீயானியைப்பற்றி விசாரித்தால் எவ்வளவோ தெரிந்துகொள்ளலாம்."

"ஒருமுறை அவள் என்னிடம் சொன்னாள். தோழர்களுக்கும் இதைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. அவளும் சொல்லவில்லை என்று...."

"ஏன் அது?"

"ஊரில் பரவிவிடுமென்று."

"நல்ல மூளை.... அதற்காக இல்லை. அவளைப்பற்றிய விபரங்களை நாங்கள் உமக்குச் சொல்லிவிடுவோமென்ற பயத்தில்... நீரும் ஏமாந்துவிட்டீர் அவள் இப்போது நேசமாக இருப்

பது ஒரு கலைஞனோடு. எங்கிருந்து வந்தானோ தெரியாது. காலையும் மாலையும் ஸ்ரீயானி வீட்டிலேதான். மாலையில் இரண்டுபேரும் உலாவப் போவதைக் கண்டேன். நீர் மாலையில் என்னோடு வந்தால் அவர்களைக் காட்டிறன்.''

∴ ∴ ∴ ∴

அன்றுமாலை ஜினசேன என்னுடன் ஸ்ரீயானியின் வீட்டிற்கு அருகிலுள்ள கடையொன்றிற்குப் போனான். கடையின் பின்கதவால் பார்த்தால் பாதை தெரியும். ஆனால் பாதையில் போவோரின் பார்வைக்குக் கடை தெரியாது.

ஜினசேனவின் பார்வை பாதையிலேயே பதிந்திருந்தது. எனது மனதிலுள்ள பாரமான வேதனையை அவன் உணரமுடியுமா? நான் எவ்வளவு துக்ககரமான நிலையில் இருக்கிறேன் என்பது அவனுக்குத் தெரிகிறதா?

''ஏய் வீரா. அதோ பார். நிலையான காதல்.'' ஜினசேன தெருவைக் காட்டினான்.

ஸ்ரீயானி தேசிய உடையணிந்த ஒருவரோடு கதைத்துச் சிரித்தவாறு அவ்வழியால் போனாள். அவர்கள் கடையைத் தாண்டும்போது அந்த இளைஞன் ஓர் ஆணழகன் என்பது தெரிந்தது.

∴ ∴ ∴ ∴

அதேதினம் இரவு ஜினசேன என்னறைக்கு வந்தான்.

''என்னப்பா இதன் அர்த்தம்? வானத்தையும் பூமியையும் பார்த்து யோசிக்கிறாய்? இப்படியென்று தெரிந்திருந்தால் நான் ஒன்றுமே சொல்லியிருக்க மாட்டேன்.''

''நான் இதையெல்லாம் குறிப்பிட்டுச் ஸ்ரீயானிக்கு ஒரு கடிதம் எழுதட்டா?''

''என்னப்பா பைத்தியமா? இனிமேல் அந்தப்பக்கமே போகாதே. அவளைக்கண்டாலும் முகத்தைத் திருப்பிக்கொள்.''

ஸ்ரீயானி எனக்கு எழுதிய சில கடிதங்களையும் படத்தையும் கையிலெடுத்த நான் அவற்றைக் கிழித்தெறிந்தேன்.

∴ ∴ ∴

நான் கடிதம் போடாததையும் தொடர்பைத் துண்டித்துக்கொண்டதையும் விசாரித்து ஸ்ரீயானி எட்டுக் கடிதங்கள் அனுப்பினாள். ஜினசேனவின் யோசனைப்படி நான் அவற்றுள் ஒரு கடிதத்துக்காவது பதில் எழுதவில்லை.

இரண்டு மாதங்கள் கழித்து நான் வேறொரு ஊருக்கு மாற்றலாகிச் சென்றேன். நண்பர்களை ஒருபோதும் மறக்காத குணம்படைத்த எனக்கு இடையிடையே ஸ்ரீயானியின் நினைவு ஏற்பட்டது. ஜினசேன எனக்குக் கடிதமெழுதுவது நின்றது, வியாபார ஸ்தாபனமொன்றில் வேலைசெய்யத் தொடங்கியுள்ளதாக அறிவித்த பிறகே.

நான் வேலைசெய்யும் ஊரில் எனக்குக் கிடைத்த ஒரே நண்பன் முத்துபண்டாரதான். எனது கடந்த காலத்தை நான் அவனிடம் சொன்னேன்.

''ஜினசேன உம்முடைய நண்பனென்பது உண்மை. என்றாலும் அவர் சொன்னதற்காக நீர் மனதை மாற்றிக்கொண்டதும் சரியல்ல. இன்

னும் விசாரித்துப் பார்த்திருக்கலாம்" பண்டார சொன்னான்.

பண்டாரவுடன் கழிந்த ஒவ்வொரு விநாடியும் என் கலங்கிய உள்ளம் நிம்மதி கண்டது. ஜினசேனவைப் போல் அதிகம் கதைக்காவிட்டாலும் பண்டாரவின் தூய உள்ளத்தை எனக்குக்குப் புரிந்து கொள்ள முடிந்தது. ஒருமுறை நானும் பண்டாரவும் கொழும்புக்கு வந்தபோது, பண்டார சொன்னதற்காக ஒரு படம் பார்க்கப் போனேன்.

"நான் பத்திரிகையொன்று வாங்கிக் கொண்டு வருகிறன்"... நான் சொல்லிவிட்டுப் படமாளிகைக்கு வெளியே போனேன்.

ஃ ஃ ஃ ஃ

பத்திரிகையோடு திரும்பியபோது படமாளிகையினுள் சற்றுத் தூரத்தில் நிலவண்ணச் சேலைகட்டிய மங்கையொருத்தி அமர்ந்திருந்ததைக் கண்டேன்.

எத்தனைபேருக்கு மத்தியில் இருந்தாலும் எனக்குத் தெரிந்த அந்த முகம் ஸ்ரீயானியுடையதே. பக்கத்து ஆசனத்தில் அன்று அவளுடன் உலாவப்போன அந்தக் கலைஞன் இருந்தான்.

"பண்டார...பண்டார..."

"ஏன் ?"

"அதோ...அதோ... நீலச் சேலை கட்டிக்கொண்டு அந்த வரிசையில் இருப்பது ... அது தான் ஸ்ரீயானி."

"ஆ! அவ இப்போ என்னுடை கதைத்துவிட்டுப் போனா ... அவவை எனக்கு நல்லாய்த் தெரியும். அந்த உமது தோழன் சொன்ன குணமோ நடத்தையோ உள்ள பெண்ணல்ல அவ. அவ எவ்வளவோ நல்லவள்."

"பண்டார, அதோ இருக்கிறான் அன்று என் தோழன் காட்டியவன்..

"அது ஸ்ரீயானியுடைய அண்ணா ...அவர் வேலைசெய்வது ஹொரணையில். அவர் இடையிடையே தான் வந்து நாலைந்துநாள் தங்கிப் போவார்.".

என்னால் பேச முடியாமற் போய் விட்டது.

"உமது தோழனும் தோழன். அப்படிப்பட்ட மனிதர்களும் இருக்கிறார்களே. மற்றவர்கள் நல்லாயிருப்பதைப் பார்த்துப் பொறுமைப் படுபவர்கள். ஸ்ரீயானி இப்போது கலியாணமானவள்." பண்டார என்னைப் பார்த்துச் சொன்னான்.

"யார்?"

"இப்போ அவர் அருகிலிருந்து போனார். மறுபடி வருவார். மனிதனெண்டா அதிர்ஷ்டசாலி."

ஏன்?"

"ஏன், ஸ்ரீயானிக்கு எழுதியிருக்கிற சொத்து... இரத்தினபுரிப் பக்கத்தில் எண்ணூறு ஏக்கர் ரப்பர் தோட்டம் இருக்கு. நாலு வீடுகள் இருக்கு இது போதாதா?... அதோ ... ஸ்ரீயானியின் கணவன் வந்துவிட்டார்,,

நான் உடனே அங்கு பார்த்தேன்.

"பண்டார, அவரை எனக்குத் தெரியும்"

"யார்?"

"அது தான் எனது முன்னேற்றத்தை, சந்தோஷத்தைத் தேடிய என்மீது அன்புள்ள நண்பன்!"

பண்டார என்னைப் பார்த்தான்.

ஆம்... பண்டார அது என் நண்பன்... ஜினசேன..."

பண்டார என்மீது வார்த்தைகளால் விபரிக்க முடியாத அனுதாபப் பார்வையொன்றை வீசினான்.

— ஃ —

கதை எழுதுபவர்கள் பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றார்கள். அவற்றுள் ஒன்றாகிய (Stream of Consciousness) பற்றிக் கட்டுரை விளக்கம் தருகின்றது.

# ○ ○ பிரக்ஞை ஓட்டம் ○ ○

கே. எஸ். சிவகுமாரன்

ஹென்றிஜேம்ஸ் என்ற பிரபல அமெரிக்க நாவலாசிரியரின் சகோதரரான வில்லியம் ஜேம்ஸ், உலகப் புகழ் பெற்ற ஒரு மனோதத்துவவாதி. உள்மனதின் அனுபவ ஓட்டத்தைக் குறிப்பிடுவதற்காக 'பிரக்ஞை ஓட்டம்' (Stream of Consciousness) என்ற தொடரை அவர் தனது 'மனோதத்துவக் கோட்பாடுகள்' என்ற புத்தகத்தில் 1890ம் ஆண்டு குறிப்பிட்டிருந்தார். இத்தொடர் இப்பொழுது இலக்கியத்திலும் இடம் பெற்றுவிட்டது.

ஒரு கதாபாத்திரத்தின் சிந்தையில், தர்க்கரீதியற்றுப்பாயும் சிந்தனைகளையும் அனுபவங்களையும், அப்படியே எழுத்தில் வடிக்கும்பொழுது அது ஒரு உத்தியாக (Technique) அமைகின்றது. மனிதராகிய நாம் சாதாரணமான வேளைகளிற்கூட, உரையாடிக் கொண்டிருக்கும் பொழுதும், தர்க்கரீதியற்றுப் பலவிதமான சிந்தனைத் திவலைகளை, எம்மையறியாமல், கணத்துக்குக் கணம் பாய்ச்சிக் கொண்டிருக்கிறோம். எனவே அந்த மாதிரியான மனோ நிலையை இலக்கியத்தில் வடிக்கும் பொழுது யதார்த்த பூர்வமாகவே அமைந்து விடுகின்றது. ஆயினும் எழுத்தாளன் தனது கதைக்கு வேண்டிய—இன்றியமையாதவற்றை—மாத்திரமே தெரிந்து, கலைநயமாகத்தீட்டுகிறான். கதாபாத்திரம் நிஜவாழ்வில், ஒரு குறிப்பிட்ட சம்பவத்திற்கு அப்பாற்பட்டவற்றைப் பற்றி மனதில் நினைத்துக்கொண்டாலும், எழுத்தாளன், அப்பாத்திரத்தின் குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமான எண்ணக்கோவைகளை மாத்திரமே வரைகின்றான். மொழியளவைப் பொறுத்த வரையில் ஒருவித கட்டுக்கோப்பான, தர்க்கரீதியான இலக்கண அமைப்பு இல்லாமல், அச்சிந்தனை ஓட்டம் இல்லாதிருந்தாலும், அவ் ஓட்டம், மனோவியலளவைப் பொறுத்தவரையில் மிக மிக, இணக்கமுடையதாக இருக்க வேண்டும்.

எடௌவாட் டுஜாடின் (Edovad—Duargine) என்ற பிரெஞ்சிய நாவலாசிரியரே முதன் முதலாக இவ் உத்தியைக் கையாண்டார் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் "யூலிஸஸ்" "பினிகன்ஸ்வேக்" போன்ற நாவல்கள் எழுதிய ஜேம்ஸ்ஜோய்ஸ்" என்ற ஐறிஷ்நாடரே, இவ்வுத்தியை மிகமிக வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறார். ஆங்கிலத்தில் எழுதிய இவ்வாசிரியரின் நாவல்களைப் படித்துப் பார்ப்பீர்களாயின், அவற்றில் முற்றுப்புள்ளி, கரைப்புள்ளி போன்ற குறியீடுகளோ, தர்க்கரீதியான இலக்கண அமைப்போ இல்லாதிருக்கக் காண்பீர்கள். விர்ஜினியா ஊல்ப்

புருஸ்ற், ஹென்றிஜேம்ஸ், ப்ளோபேர் போனர்க், போன்ற ஆசிரியர்களும், மற்றும் டொறதி ரிச்சட்சன், ஸ்கொட், ஜேன் ஒஸ்ரின், ஸ்ரேனி, பீல்டிங், கொன்ருட், ரோல்ஸ்ரோய், டொஸ்ரொவஸ்கி, ஹெமிங்வே, டிக்கன்ஸ் போன்ற எழுத்தாளர்களும், இவ் உத்தியின் சாயலைக் கொண்டு தமது படைப்புகளைச் சிருட்டித்திருக்கின்றனர்.

'பிரக்ஞை ஓட்ட' உத்தியின் சாயலைக்கொண்டு தமிழில் லா. ச. ராமாமிருதம், மௌனி, புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி ஜெயகாந்தன் போன்ற 'அக உலகக்கலைஞர்கள்' இலக்கியம் சிருட்டித்திருக்கின்றனர்.

இலங்கையில் எஸ். பொன்னுத்துரை தனது வளமான ஆனால் பிரயத்தனமான நடையின் துணைகொண்டு, இவ் உத்தியைக் கையாழுகிறார், மற்றும் காவலூர் ராசதுரை, செ. யோகநாதன், கே. எஸ். சிவகுமாரன் போன்றோரும் இதில் நாட்டமுடையவர்கள் என்பதற்கு அவர்களது சமீபத்தியப் படைப்புகள் சான்றாயிருக்கின்றன.

---

கருத்தரங்கம்:

## முற்போக்கு இலக்கியம்

ஈழத்து இலக்கிய உலகில் முற்போக்கு இலக்கியம் என்ற சொற்பிரயோகம் அடிக்கடி உபயோகிக்கப் பட்டு வருகின்றது.

இலக்கியத்தில் 'முற்போக்கு' என்று ஒரு தனிப் பிரிவு இருக்கின்றது; இருக்கவேண்டும்-என்று நம்பும் எழுத்தாளர்களும் -

இலக்கியம், இலக்கியம்தான், அதில் முற்போக்கு என்ற பிரிவுக்கே இடமில்லை என்று நம்பும் எழுத்தாளர்களும் -

கலந்துகொள்ளும் பயனுள்ள கருத்தரங்கம் ஒன்று "கலைச்செல்வி" கலைவிழா மலரில் தொடங்குகின்றது.

கா. சிவத்தம்பி B. A.
தேவன் - யாழ்ப்பாணம்.
க. கைலாஸபதி B. A. (Hons)
மு. தளையசிங்கம் B. A.
எஸ். டி. சிவநாயகம்.

முதலிய பலரின் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

# ஒருவன், இன்னொருவன்!

## மு. பொன்னம்பலம்

கார்மேல் ஊர்சுற்றிக்
      களிக்கின்ருன் ஒருவன் - சுடு
தார் எல்லாம் கால் ஒட்டத்
      தவிக்கின்ருன் ஒருவன்!
போர் வேண்டிப் பொருளெல்லாம்
      அழிக்கின்ருன் ஒருவன் – தன்
ஓர் நேர வயிற்றுக்காய்
      உழைக்கின்ருன் ஒருவன்!

மேல்மாடி பல போட்டு
      வாழ்கின்ருன் ஒருவன் – தன்
கால்நீட்ட இடமின்றிக்
      குறுகின்ருன் ஒருவன்!
பால் ஊட்டி நாய்க்குட்டி
      வளர்க்கின்ருன் ஒருவன் - தெரு
மேல்க்காணும் எச்சிலைக்காய்
      திரிகின்ருன ஒருவன்!

பலகட்டி தன்னழகைப்
      பார்க்கின்ருன் ஒருவன் - கந்
தலுக்குள்ளே தன்மானம்
      காக்கின்ருன். ஒருவன்.
கொலைசெய்து பணம் சேர்த்துக்
      குவிக்கின்ருன் ஒருவன் - தற்
கொலைக்கேனும் வழியின்றிக்
      கிடக்கின்ருன் ஒருவன்!

ஏர்பூட்டி நிலங்கீறி
      உழைக்கின்ருன் ஒருவன் - அவன்
வேர்வையிலே முளைத்தெழுந்து
      குதிக்கின்ருன். ஒருவன்!
நேர்மாறிக் கிடக்கின்ற
      உலகே நீ எந்நாள் - சம
ஓர்மட்டத் திணையெட்டி
      உயர்வுற்று நிற்பாய்?

சுத்தமாக

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினால்

## விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

## சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

# ராஜு ஸ்ரோர்ஸ்

போன்: 372

2/B, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

தந்தி ESVES

# S. SINNATHURAI & BRO,

Importers & Exporters. Sole Agents for

## 786 Kalki Beedies

நீங்கள்

உல்லாசமாகப் புகைப்பதற்கு




786 கல்கி பீடி

## 78 கல்கி பீடிகள்

திறம் பீடிப் புகையிலை, பீடி இலை,
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

39, K. K. S. ரேட் : : யாழ்ப்பாணம்.

கிளை:
44, 3ம் குறுக்குத் தெரு : : கொழும்பு

தொழிற்சாலை:
118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

நாய் பசியால் கதறியபோது கவனிக்காதவர்கள், காரில் அடிபட்டபோது அனுதாபம் காட்டினார்கள். ஏன்? இவ்வாண்டு பல்கலைக் கழகம் புகுந்துள்ள "மாலினி"யின் கதை விடை தரும்.

# நாயினும் கடையர்

மாலினி

பத்தியான வெய்யில் கொளுத்தியது. வீதியில் தார் உருகி ஓடி விடுமோ என வெய்யிலின் உக்கிரம் இருந்தது. காற்றின் வெப்பம் அனலாகக் கொதித்தது. வீதியில் வாகனங்கள் எல்லாம் அசுரவேகத்தில் பறந்து கொண்டிருந்தன. பாதை ஓரத்தில் இருந்து விற்பனை செய்யும் 'நாடோடி' வியாபாரிகளின் கூச்சல்கள் காதைத்துளைத்தன. ஜனங்கள் வீதியோரத்தில் அவசர அவசரமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆக, அங்கே எல்லாமே இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தன.

அப்போது இதையெல்லாம் லட்சியம் செய்யாமல், பாதை ஓரத்தில் ஒரு ஜீவன் கிடந்தது. அது யார்? அது ஒரு நா—ய். ஒரு குச்சு நாய். மிகவும் மெலிந்து, வயிறு ஒட்டி உடலெல்லாம் சொறிபிடித்து, கத்தக் கூட சக்தியில்லாமல் தெரு ஓரத்தில் முடங்கிக் கிடந்தது. ஈக்கள் அதை(ச்) சுற்றி மொய்த்துக் கிடந்தன அவற்றைக் கலைக்கக்கூட அதற்கு சக்தியில்லைப் போலும். ஆக அதைப் பார்ப்பதற்கே பயங்ரமாக, பரிதாபமாக இருந்தது.

அப்போது, ஒரு கனவான் தனது உயர்ந்த ஜாதி நாயை, தனது அருமை மகனை அழைத்து வருவதைப்போல், அழைத்துக் கொண்டு வந்தார். இந்த நாய் அந்த நாயைப் பார்த்து ஆங்காரமாக, திமிராக குலைத்தது. அந்த நாய், பாவம்! என்ன செய்யமுடியும்? பரிதாபமாகப் பார்த்தது. அக் கனவான் ஆடம்பரமாக, அங்கிருந்த வியாபாரியிடம் தனது நாய்க்கு உயர்ந்த ஜாதி 'பிஸ்கட்' வாங்கிக் கொண்டிருந்தார். இந்தக் குச்சு நாய்க்கு நாவில் ஜலம் ஊறியது— இல்லை! இல்லை! ஜலமிருந்தாலல்லவா ஊற! மீண்டும் பரிதாபமாகப் பார்த்தது. கத்தவாயைத் திறந்தது. கனவானைப் பார்த்தது

ஆனால் அவர் தன்பாட்டில் சென்று விட்டார். வியாபாரியாவது கொடுக்க மாட்டானா என்ற ஆவலில் அவனை நோக்கி நகர்ந்தது. வியாபாரி கொடுத்தான்—கல்லெறி. முக்கிமுன கியபடி திரும்பிச் சென்றுகொண்டிருந்தது அந்த நாய்.

அச் சாலையோரத்தில் எத்தனையோ பேர்கள் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு என்ன அவசர காரியமோ தெரியவில்லை. அந்த நாய் மீண்டும் யாராவது ஏதும் தருவார்கள் என்ற நப்பாசையுடன் தலையைத் தூக்கித் தூக்கிப் பார்த்தது. அது அப்படிப் பார்க்கும் போதெல்லாம் அங்கிருந்த வியாபாரிகள் எல்லோரும் சிரித்தார்கள், ஒரு ஜீவன் அவஸ்தைப்படும் போது அதை இரசிப்பதென்றால் ஆனந்தம் தானே!

சில நிமிடங்கள் நகர்ந்தன சாலையில் வண்டிகள் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தன. அவை போகும் வேகத்தில் அவை எங்கே கவிழ்ந்து விடுமோ என பயப்படும் படியாகவிருந்தது. அக்குச்சு நாய் இப்போது தத்தித் தத்தி மெதுவாக சாலையை நோக்கி நகர்ந்தது.

இன்னும் சிறிது நேரம் சென்றது. அப்போது 'தடார்' என மெலிய சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து "வாள்", "வாள்", என்ற ஓர் வேதனை கலந்த குரல் கேட்டது ஆம்! யாரோ ஒரு அப்பாவி மோட்டார்காரன் தான் போகும் அவசரத்தில் இந் நாயை மோதிவிட்டான். அது வேதனையில் அலறியது, சிறிது நேரத்தில் அதைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது. சிலர் அந்த மோட்டார் சாரதியைப் பிடித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் அடிபட்ட நாய் தன்னுடையதென்றும், தான் அருமையாக வளர்த்ததென்றும் கண்ணீர் வராத குறையாக அழுது கூக்குரலிட்டான். நாயின் மீது அவன் வைத்துள்ள அன்பை சில அப்பாவிகள் உண்மையாகவே பாராட்டினர்கள். கடைசியில் நாயை அடித்ததற்காக சாரதி அவனிடம் மன்னிப்புக் கேட்பதென்றும், நஷ்ட ஈடாக இருபத்தைந்து ரூபாய் கொடுப்பதென்றும் சொல்லிய பொழுது மிகவும் கஷ்டப்பட்டு ஒப்புக் கொண்டான் அம் மனிதன்.

இந்தக் கலவரத்தில், நாய்மனிதர்கூட்டத்திலிருந்து நழுவி மெல்ல, மெல்ல நகர்ந்து வெகுதூரம் சென்று விட்டது. தனக்காக நீலிக் கண்ணீர் சிந்தி, தன்பேரில் பணம் வாங்கியவன், சற்று முன் தன் மீது கல்லை விட்டெறிந்த அந்த வியாபாரிதான் என்பதை அது அறிந்து விட்டதோ என்னவோ!

---

## இனி ஒரு விதிசெய்வோம்!

நமது நண்பர்கள் உறவினர்கள், முதலியோருக்கு அவர்களின் பிறந்தினம், திருமண விழா, மற்றும் மங்கல நிகழ்ச்சிகளின் போது பரிசுப் பொருட்களைக் கொடுக்கின்றோமல்லவா? அப்பொழுது, இலங்கை எழுத்தாளர்கள் எழுதிய நல்ல நூல்களையும் பரிசளிப்போம் என **இனி ஒரு விதிசெய்வோம்!**

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதியில் பணிபுரியும் அன்பர் கோவிந்தபிள்ளை நல்ல கவிஞர். வீரகேசரி, தினகரன், சுதந்திரன், இளங்கதிர், பேராதனைக் கவிதைகள், கலைப் பூங்கா, முதலிய இதழ்களில் கவிதைகள் வெளியாகியுள்ளன. "கவிதைச் செல்வம்" "தமிழ் எங்கள் ஆயுதம்" - தொகுப்பு நூல்களில் இவருடைய கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. "பிரமஸும் திஸ்பி"யும் என்ற கிரேக்கக் கதையைத் தழுவி இக் காவியத்தை ஆக்கியிருக்கின்றார்.

# வாழும் காதல்!

## வ. கோவிந்தபிள்ளை

விண்ணுற நிவந்த கோயில்
 வியன்மதிற் கொடிகள்; பார்ப்போர்
கண்ணுறப் புகுந்த தென்னக்
 கவின்சொரி சோலை; கற்றோர்
பண்ணுற ஒலிக்கும் கீதம்;
 பாவையர் சிற்ப வல்லோர்
எண்ணியே வடித்த தென்னும்
 எழிலுறு கவர்ச்சி மிக்கார்.

இன்னன திகழும் நாட்டில்
 ஏற்றமும் புகழும் விஞ்சப்
பொன்னென மிளிருந் தோற்றப்
 பொலிவுடைப் 'பிரமஸ்' என்பான்
கன்னிய ருள்ளங் கொள்ளக்
 கல்வியிற் குணத்திற் பண்பிற்
பன்னருஞ் சிறப்பு மோங்கப்
 'பாபிலோன்' நகரில் வாழ்ந்தான்.

வேறு.

வானீன்ற தண்மதியோ! குளிர்ந்த சோலை
 மருவீன்ற தென்றலோ! அழகுப் பூக்கள்
தேனீன்ற இன்சுவையோ! தெவிட்ட லில்லாச்
 செம்மொழியின் காவியமோ! கிழக்கு நாட்டுப்
பூவீன்ற பொற்றொடியோ! மலர்கள் சூழ்ந்த
 பூம்பொழிலோ! எனவியக்க அயல கத்தே
காலீன்ற எழில்மிகுந்த மலரைப் போன்று
 கவின்சுமந்து நின்றனளே 'திஸ்பி' நங்கை.

வேறு

சின்ன வயதில் இருவரும் - இரு
சிட்டுக் குருவிகள் போலவே
இன்னிசை பாடியும் ஆடியும் - இரு
கண்ணும் மணியும்போல் வாழ்ந்தனர்.

பிள்ளைப் பருவத்தில் இவ்விதம் - அவர்
பேச்சும் செயலும் நடந்ததால்
உள்ளத்தில் அன்பு வளர்ந்ததே - பின்னர்
ஒப்பற்ற காதலாய் மாறிற்றே.

விட்டுப் பிரிந்திட ஏங்குவான் - அவள்
வேறு வழியொன்று கூறுவாள்
தொட்டு முகர்ந்திடச் செல்லுவாள் - மங்கை
துள்ளிக் குதித்தப்பால் ஓடுவாள்

பூத்த புதுநிலா என்றிட - அவள்
பொன்னுடல் மாறி யனுதினம்
ஈர்த்திடும் பார்ப்பவர் கண்களை - அவள்
எங்கென் றலைந்திடும் பின்னரும்.

வேறு.

சித்திரப் பொற்பாவை - அழகு
சிந்திடும் அங்கத்தினள்
முத்தெனவே உதிர்ப்பள் - அரிய
மோகனப் புன்னகையை.
பார்க்கும் பொருளிலெல்லாம் - அவளின்
பல்லொளி தோற்றிடுமே
ஈர்க்கும் உளத்தினையே - அவளின்
இன்னிசைக் கீதங்களாம்
அண்மையில் வீற்று நின்றே - அவர்கள்
அன்புடன் பேசிடுங்கால்
உண்மை நிறை காதல் - அவர்கள்
உள்ளத்திற் பொங்கிடுமே,

வேறு

காதல் வளர்வதைக் கண்டனர் - பெற்றோர்
கண்டித்து பேசினர் இருவர்க்கும்
ஏதம் வருமென்றுங் கூறினர் - காதலர்
எதையும் செவியில் மடுத்திலர்.

காலம் நகர்ந்ததைக் காண்கிலார் – எனில்
காதல் வளர்ந்ததே கண்டனர்
பாகுங் கசந்திட்ட தாங்கவட் – கன்பன்
பால்முகங் காணுதி ருந்ததால்.

நெட்ட நெடிய மதிலொன்று – மிக
நீண்டு வளர்ந்தே இருந்ததால்
கிட்டி நெருங்கிப் பழகிடக் – காதலர்க்
கின்னலாய் நின்றதென் ஞளுமே.

பெற்று வளர்த்திட்ட தந்தைதாய் – மணப்
பேற்றினைக் கண்டு களித்திட
முற்றும் மறுத்தனர்; காதலர் – உளம்
முற்றிக் கனிந்தது காதலால்.

"காதலர் வாழ்விற் தடையாக – பெரும்
கர்சுவர் நீயிங் கிருப்பதேன்
சாதலைக் காணவோ நிற்கிருய்" – என்று
சாற்றுவான் துன்ப மிகுதியால்.

"ஏதம் விழைக்குதே வார்த்தைகள் – அன்பெனில்
எற்றுக்கு அவ்விதம் செப்புவான்
காதல், எவராலும் காணுத – துளைதனைக்
கண்டதை என்சொல்லி வாழ்த்துவேன்"

ஆறுதல் கூறுவான் இவ்விதம் – பின்
அன்பினல் முத்தங்கள் ஈய்குவாள்
கூறும் மொழிகளைச் செப்பிடும் – சுவர்
கோவை யிதழ்முத்தம் தான்பெறும்.

இவ்விதம் நாட்கள் நகர்ந்தன – எனின்
இன்னல் தவிர்ந்தில வாழ்விலே
கவ்வி இருளும் பரந்திட – அவர்
கால்கடுத் தேகுவர் இல்லமே.

காலைப் பொழுது புலர்ந்திட – அவர்
கண்டு களித்திடச் சேருவார்
மாலைப் பொழுது மருவிட – மன
வேதனை யோடுபி ரிவரே.

இவ்விதம் எத்தனை நாட்களை - நாம்
ஏற்றிக் கழிப்பது வாழ்ந்திடில்
செவ்விய ஓரிடம் இன்றிரா — இருவரும்
சேருவோம் என்று கருதினர்.

வேறு

நாட்டைத் துறந்துநாம் ஏகுவோம் — இந்
நாட்டிற் திரிவதும் தீமையே - சுடு
காட்டில் அமைந்துள்ள கல்லறை — அயல்
கட்டாயம் சந்திப்போம் என்றனர்.

சிந்தை களித்தவர் காதலர் — விதியிவர்
செய்கை அறிந்து நகைத்ததே — குகை
அந்தம் அடைந்தனள் திஸ்பியும் — அறை
அருகில் அமர்ந்தனள் காதலால்.

வேறு

வானிலவு 'திஸ்பி' யின் வரவைக் கண்டு
வையமெலாம் செஞ்சாந்து தடவி னற்போல்
கானெங்கும் நதியெங்கும் ககன மெங்கும்
கவினொளியால் அழகுசெய்தே உடுக்கள் தம்மை
மானங்கு வந்தபின்னர் மலர்கள் தூவ
மருங்கினிலே வான்தட்டிற் பரப்பி வைத்தாள்
தேனங்கு வந்ததுதான் திசைக ளெல்லாம்
தேங்கியதே அழகென்னும் வெள்ளத் தாலே.

ஒளிமிகுக்கப் பால்நிலவு உடுக்கள் கூட்டம்
உவமையிலா அழகுசெய்ய உயர்வி சும்பில்
களிமிகுக்க உள்ளத்தில் கவருந் திண்தோட்
காதலனை அகத்தினிலே நிறைத்தாள்; ஆனல்
அளிமிகுக்கும் பூங்குழலாள் அவல மெல்லாம்
அறிந்திலன்தன் காதலனை அடைந்த பின்னர்
விழிகளிப்ப மனங்களிப்ப வியக்கும் மார்பன்
மீதினிலே தலைசாய்க்கக் கனவு கண்டாள்.

வேறு

உணவு அருந்திய பெண்சிங்கம் — ஒன்று
ஊற்றினில் நீர் உண்டு வருவதை
குணமிகு செல்லியுங் கண்டனள் — உடன்
கொண்டனள் மிகுபயம் உள்ளத்தே.

தலையினை மூடிய வெண்துகில் – தவறித்
தரையில் விழுந்திட ஓடினள்
அயலில் நெருங்கிய சிங்கமோ – அதைக்
கண்டதும் கொண்டது கோபமே.

இரத்தம் படிந்ததன் வாயினற் – துண்டினை
எற்றிக் கிழித்தப்பால் ஏகிற்று
வருத்தம் அடைந்தவள் ஓடினள் – காதலன்
வரவினைக் காணது ஏங்கியே.

பிரமஸ் அடைந்தனன் கல்லறை – ஆங்கன்
பிரமிக்கச் செய்தது செந்துகில்
வரமிகு தாமதம் ஆனதால் – என்றன்
வாழ்க்கைத் துணைவியைக் கொன்றனே.

மதியை மயக்கிய விதியவன் – நின்று
மகிழ்வுடன் புன்னகை பூத்தயல்
கதியறி யாதவன் சிந்தையில் – அவன்
காதலி மாண்டனள் என்றதே.

### வேறு

நெட்டுயிர்த்துப் புலம்பிடுவான் ஐயகோ! என்
நினைவிலென்றும் அழியாத ஓவி யத்தைக்
கட்டவிழா மலர்த்தொடையை அமுதைத் தேனைக்
கண்மணியென் காதலியைக் கவிதை யூற்றைப்
பொட்டணிந்து புவனமெலாம் அழகு செய்த
பூங்கொடியை இனிமைதரும் புருவத் தானை
மட்டவிழ்ந்த பூங்கூந்தல் வனிதை தன்னை
வாழ்வதற்கு வைத்திலனே கொடியன் அந்தோ

கரத்தினிலே செந்துகிலை எடுத்து நோக்கிக்
கவலைமிக மார்புடனே அணைத்தான் முத்தம்
தரத்தகுதி எனக்குண்டோ அன்பே! என்று
தரையினிலே புரண்டழுதான் வாளெ டுத்தே!
உரத்தினிலே பாய்ச்சியென்றன் உயிரைப் போக்கி
உன்கூட வருகின்றேன் என்று செப்பிக்
கரத்தினிலே, கொண்டுசென்று வாளெ டுத்தான்
கலங்கிற்றே வான்,மதியோ டுடுக்கள் கூட்டம்

ஆதவனின் வரவைஎதிர் பார்த்து நிற்கும்
அம்புயம்போற் காதலனை நோக்கி நின்ற
மாதவளின் உள்ளத்தே கவலை வெள்ளம்
மண்டிடவே மென்மேலும் திகைப்பு விஞ்ச
நோதலுற்ற உள்ளமொடு எழுந்தாள் சோரும்
நுடங்கிடையாள் அங்குமிங்கும் தேடிப் பார்த்தாள்
காதலனை எவ்விடத்தும் காணகி லாத
கவலையினுற் சோடிழந்த அன்றி லானுள்.

தேடிவந்த மங்கைகா லிடறி வீழ்ந்தாள்
திகைத்திட் டாள் பார்த்தவுடன் அரற்றி னுள்பின்
நாடிவந்த பாவைகரம் வாளி ழுத்தே
நலிவின்றித் தன்வயிற்றிற் பாய்ச்ச அன்பே!
ஓடிவந்தேன் உனைக்காண எங்கு சென்ருய்
உவப்பூட்ட ஒருவார்த்தை சொல்சொல் லென்று
வாடிவீழ்ந்தாள் கண்விழித்தான் கண்டான்; கண்டாள்;
வையமெலாம் இருள்கவிந்து மறைத்த தந்தோ.

சீர்மிகுந்த பிரபுக்கள் குலத்தில் அன்று
சித்திரம்போல் வந்துதித்த ஜூலியத்தும்
பேர்மிகுந்த அரேபியா தேசம் வாழ்ந்த
பெய்வளைக்கை லைலாவும் பாபி லோனில்
தார்மணக்கும் திஸ்பியும் காத லென்னும்
தடத்தினிலே கட்டுண்டு விதியி னேடு
போர்புரிந்து மாண்டனரே எனினும் அன்னர்
புகழ்மிகுந்த காவியம்போல் வாழு கின்றுர்.

புதிய அம்சம்:

# என்னைக் கவர்ந்த
# என் கவிதை

அடுத்த இதழில் ஆரம்பம்.

குயில் கூவுகின்றது. அதிலே உமாவின் குரல் கேட்கின்றது. குயிலோசை காற்றில் மிதந்து வர, உமா அவன் கருத்தில் மிதந்து வருவதை, காங்கேசன்துறையில் வாழும் புதிய எழுத்தாளர் சுவையாகக் கூறுகின்றார்.

# குயிலோசை

அ. இராசதுரை

தென்றல் வீசுகிறது. வேப்பம் பூக்கள் என் தலையில் விழுகின்றன. உமாதான் வேப்பம் பூக்களை அள்ளி என் தலையில் தூவுகிறாளோ...? வேப்பமரத்தின் உச்சிக் கொப்பிலிருந்த குயிலொன்று கூ....ஊ... கூ....ஊ... என்று கூவிக்களிக்கிறது. உமாதான் குயிலாக வந்திருந்து என்னைக் கூப்பிடுகிறாளோ...? அந்தக் குயிற் பாட்டை ஒரு முறை படித்துக்காட்டுங்களென்று உமா குயிலான குரலில் கேட்கிறாளோ...? இல்லை என்னைத் தான் தனது குயிற்பாட்டைக் கேட்கும்படி வற்புறுத்துகின்றாளோ...? கூ... ஊ... கூ....ஊ... என் நெஞ்சில்ஒருவித இன்பக் குளுமைகாய்ச்சிய பால்போல் பொங்கி எழுகிறது. "உமா... உமா உனது குயிலான குரலால் அந்தக் குயிற் பாட்டை ஒரு முறை பாடிக் காட்டடி...". உமாமயிலாக ஆடிவருகிறாள். அன்னமாக அசைந்து வருகிறாள். புள்ளிமானாகத் துள்ளி வருகிறாள். அவள் கையில் பாரதியார் பாடல் புஸ்தகம் இருந்தது. உமாவை நான் என் இரு கரங்களினாலும் தழுவிக் கொள்கிறேன். அவள் அந்த வேப்பமரத்தின் குளுமையான நிழலின் கீழ் தென்றல் சாமரை வீச என் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தபடி அந்தக் குயிற்பாட்டைக் குயிலாகப் பாடுகிறாள். பாடிப்பாடி என் மடி மீதே கண்ணயர்ந்து விடுகிறாள். அந்தப் புஸ்தகத்தின் அட்டையிலுள்ள பாரதியார் உயிர் பெற்றெழுந்து வந்து அந்தக் காட்சியை இரசித்துச் சுவைத்தபடி ஒரு கவிமாலையே புனைந்து அதை எங்கள் கழுத்தில் மணமாலையாகப் போட்டு வாயார வாழ்த்துவது போன்ற ஒருவித இன்பக் கிளுகிளுப்பு. "ராஜ்! என் மனதில் ஒரு ஆசை பூத்திருக்கிறது. அது நிறைவேறினாற்றான் எனக்குநிம்மதி... மனச் சாந்தி..."

"என்னஉமா..."

"அம்மாவும் ஐயாவும் வீட்டிலில்லாத சமயம் இந்த வேம்பின் குளிர்ச்சியான நிழலின் கீழ் நான்... உங்கள்... மடிமீது தலைவைத்துப் படுத்திருந்தபடி இந்தக் குயிற்பாட்டைப் பாடிப் பாடி சந்தோஷமாகக் கண்ணயர வேண்டும்... என்ன உங்களுக்கும் சம்மதம்தானே...?"

உமாவின் இந்த ஆசையை நான் நிறைவு பெறச்செய்து முடித்தேனோ...? இறந்துபோன நிகழ்ச்சிகள் உமாவாக உயிர்பெற்று......

∴ ∴ ∴

நானும் உமாவும் ஒரே கல்லூரியிலேயே படிப்பித்தோம். நான் இலக்கிய ஆசிரியன். உமா இலக்

கிய ஆசிரியை. உமாவின் வீட்டிலே தான் நான் அறையெடுத்துத் தங்கி யிருந்தேன். உமாவிற்கு பாரதியா ரின் குயிற்பாட்டில் ரசனை அதிகம். அவளின் குரல் குயிலைப் போல் இனிப்பானது. அந்த இனிமையான குரலில் அவள் அந்தக் குயிற்பாட் டைப் பாடினல் பாரதியாரே நேரில் வந்து பாடிக் காட்டுவது போன்றே எனக்குத் தோன்றும். நான் உமா விலும் பார்க்க அவள் படித்துக்காட் டும் அந்தக் குயிற்பாட்டையும் அவ ளது இலக்கிய ஆர்வத்தையுமே காத லித்தேன். இந்த அபிமானமே என்னை உமாவின் காலடியில் அவ ளது இலக்கியக்காதலனுக அர்ப்ப ணித்தது. உமாவை என் இலக்கியத் துணைவியாக்கிக்கொண்டு பாரதியின் குயிலிலும் இனிமையான குயிற் பாட் டுக்களை நான் சாகும் வரைக்கும் உமாவிடமிருந்து தேனில் குழைத்த தினைமாவாக வாங்கி வாங்கிச் சாப் பிட்டுச் சுவைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் ஆசைக்கனவு கண்டேன். எட்டயபுரத்தையும் பாரதி யாரையும் உமா அடிக்கடி பாடிக் காட்டும் அந்தக் குயிற்பாடலுக்குள் ளேயே நான் கண்டு களித்தேன். அது ஒருநாள்...

நான் அந்த வேப்பமரத்தின் கீழ் ஒரு கதிரையில் உட்கார்ந்திருந்து அடிக்கடி இன்பத்தால் சிவந்து மல ரும் உமாவின் கன்னங்களைப் போன்று சிவப்பேறியிருக்கும் அந்தி வான மங்கையைப் பார்த்தபடியே சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன், என் இலக்கியக் காதலி உமா வந்தாள். வரும்போது கையில் வழக்கம்போல் பாரதி பாடல் புஸ்தகத்தையும் ஏந் திக்கொண்டு வந்தாள். அது மட்டு மல்ல. "பாரதியாரைப் போல் நீங்க ளும் கவிபாடப் போகிறீர்களோ... அந்தி வான மங்கையின் இரத்தம் தோய்ந்த உடலையா வைத்துப் பாடப் போகிறீர்கள்..." என்று கிண்டலும் செய்துகொண்டு வந்தாள் "நானும ஒரு பாரதியாராகத்தான் வரப்போ கிறேன். உமா... நான் எவ்வளவு பாடல்களைத்தான் இயற்றினலும் நீ ஒருத்தி போதாதா உன் குயில் போன்ற குரலினல் படித்துக் காட்டி இந்தப் பாரதியாரை என்ன அந்தப் பாரதியாரைக் கூடச் சந்தோஷப்பட வைப்பதற்கு" இப்படி நான் உமா விற்குப் பதில் கிண்டல் போட்டேன் "சரி அதெல்லாம் போகட்டும். இப் பொழுது உங்களிடம் நான் ஒன்று கேட்கப் போகின்றேன்..." அவள் தலையைத் தடவிப் பார்க்க ஆசைப் படும் அந்த வேப்பமரத்தின் ஒரு கரத்தில் தனது கரத்தைப் போட்ட படியே உமா இழுத்தாள். 'சரி" எனறு நான் தலையை ஆட்டினேன். உமா சொன்னுள்... "ராஜ்! என மனதில் ஒரு ஆசை பூத்திருக்கிறது. அது நிறைவேறினுற்ருன் எனக்கு நிம்மதி... மனச்சாந்தி..." என்ன உமா..."

......"அம்மாவும் ஐயாவும் வீட் டிலில்லாத சமயம் இந்த வேப்பின் குளிச்சியான நிழலின் கீழ் நான்... உங்கள்...... மடிமீது தலை வைத்துப் படுத்திருந்தபடி இந்தக் குயிற்பாட் டைப் பாடிப்பாடிச் சந்தோஷமாகக் கண்ணயரவேண்டும் என்ன உங்க ளுக்கும் சம்மதம் தானே...?

இதைச் சொல்லி முடிப்பதற்குள் உமாவின் முகம் இரத்தவெள்ளம

ஓடும் போர்க்களமாகவே மாறிவிட்டது. வெட்கத்தில் உமா பாரதி பாடல் புஸ்தகத்தினுல் தனது முகத்தையே மூடிக்கொண்டாள். நான் உமாவின் வெட்கத்தைக் கூட்டுவதற்காகப் பலமாகச் சிரித்தேன்.

அன்று சனிக்கிமை. உமாவின் அம்மாவும் அப்பாவும் கோயிலுக்குப் போய்விட்டார்கள். நான் அந்த வேப்பமர நிழலின் கீழ் அமர்ந்திருந்தேன். உமா நாணிக்கோணியபடியே வந்து என் மடியில் தலைவைத்துப் படுத்தாள். படுத்தவுடன் உமா தன்னையே மறந்தாள். அவள் முகம் இரத்தமாய்ச் சிவந்தது. என்னுடல் முழுவதும் ஒருவித காந்த உணர்ச்சி. உமா அந்தக் குயிற்பாட்டைப் பாடத்தொடங்கினள்.

மாயக்குயிலதுதான்
மானுடவர் பேச்சினிலோர்
மாயச் சொல்கூற
மனந்தீயுற நின்றேன்
காதலை வேண்டி
கரைகின்றேன் இல்லையெனில்
சாதலை வேண்டித்
தவிக்கின்றேன்.

உமா இந்தப்பாடலைப் பல முறை திருப்பித் திருப்பப் படித்துக் கொண்டிருந்தாள்: வேப்பமர இலைகள் கூட உமாவின் அந்தப் பாடலில் உருகிவிட்டனவோ...? ஆடாது அசையாது மௌனம் காத்தன. உமாவின் கண்களும் உறங்கிக் கொண்டேபோயின. உமாவின் குயிலோசை அருகிக் கொண்டே வந்தது. எனது உள்ளமும் உடலும் பதறி வியர்த்துப் பெருகின, அவள் குரல் நின்று விடுகிறது அந்தப் புஸ்தகம் அவள் மார்புமீது சாய்கிறது. அவள் கண்கள் முற்றுகவே உறங்கிவிடுகின்றன. அவள் முகத்தில் படர்ந்து பரவிய செம்மை நிறம் அழியவில்லை......

∴ ∴ ∴

அந்த நிகழ்ச்சிகள் மீண்டும் செத்துவிடுகின்றன. அந்தத் தென்றலும் வேப்பநிழலும் என்னை நெருப்பாய் எரிக்கின்றன. கூ....ஊ...... கூ....ஊ... அந்தக் குயில் மீண்டும் கூவிவிட்டு உமாவாகப் பறந்தோடி விடுகிறது. உமாவின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதுபோல் என் கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் கொட்டுகிறது. அந்தக் கண்ணீர் உமாவின் பாரதி பாடல் புஸ்தகத்தின் அட்டையிலுள்ள பாரதியாரின் உருவத்தின் மேல் விழுந்து வழிகிறது. உமாவிற்காக அந்தப் புலவனும் கண்ணீர் வடிக்கின்ருனே......?


புதிய விற்பனையாளர்

**லக்ஷ்மி ஸ்டோர்ஸ்**

நியூஸ் ஏஜன்ற்

நெல்லியடி, : : கரவெட்டி.

ஏழு மணி!

புறப்பட்டுவிட்டேன்.

ஏதோ ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் "இன்று இரவு வீட்டிற்கு வரவேண்டும்" என்ருள் மகேஸ்வரி. 'ஆகட்டும்' என்றுவிட்டேன். இனி எப்படியும் போய்த்தான் ஆகவேண்டும். இல்லையென்ருல் தப்பாக நினைத்துக்கொள்வாள். போய்விடுவோம்.

∴ ∴ ∴

மகேஸ்வரி — அவள்தான் அன்று நான் முதன்முதலாக அலுவலகத்தில் நுழைந்தபோது வரவேற்றவள். அந்தஅலுவலகத்தின் விசாரணைப் பகுதியில் அவள் இருந்தாள்.

# வாழமுடியாதவன்

முல்லைச்சிவன்

அவளைக் கண்டதும் நான் தடுமாறிவிட்டேன், ஒருகணம்! 'பரமேஸ்வரி என்னையும் முந்திக்கொண்டு எப்படி இங்கே வந்தாள்? வீட்டிலே இருந்தவள் இந்த வேலைக்கு எப்படி வந்தாள்? கொழும்பில்தான் கொஞ்சம் நிம்மதியாகக் காலத்தைக் கழிக்கலாம் என்ருல், இங்கேயும் வந்து விட்டாள் வேதனை தர?' இப்படிப் பலகேள்விகள் என் புண்பட்ட உள்ளத்தில் எழுந்து மடிந்தன.

அடுத்தகணம் புரிந்துகொண்டேன் என் தவறை. அங்கே இருந்தவள் மகேஸ்வரி!

என்னைச் சமாளித்துக்கொண்டு என்னிடமிருந்த நியமனப்பத்திரத்தைக் கொடுத்தேன்.

"உங்கள் பகுதி அதிகாரி வரவில்லை. கொஞ்சம் இருந்துகொள்ளுங்கள்" என்று இனிய குரலில் தேன்சொட்டும் செந்தமிழில் கனிவாகப் பேசினுள்.

நான் கிறுகிறுத்துப் போனேன், அரைகுறை ஆங்கிலம் படித்த தமிழ்ப் பெண்கள் கொழும்பிற்கு வந்துவிட்டால், பின் தமிழ் அவர்களுககு வராமல் விடுவது சர்வசாதாரணம். ஆனுல், மகேஸ்வரி என்பெயரை அறிந்ததுமே தமிழில் பேசினுள்.

"நீங்கள் யாழ்ப்பாணம்தானு"? என்ருள் அதே கனிவுடன்,

"ஆமாம்" என்றேன்

"நீங்கள்..." அவள் கேட்டு முடிப்பதற்குள் அந்த அதிகாரி வந்து தொலைந்துவிட்டார்.

அதன்பின் என்னைத் தனிமையில் சந்திக்கும்போதெல்லாம் பேசுவாள். அவளுக்கோ என்னில் ஏராளமான அன்பு. ஆனுல் நானே அவளிடமிருந்து எவ்வளவிற்கு மறைக்கலாமோ அவ்வளவிற்கு மறைத்துக் கொண்டேன் என்லை. இதனுல் அவளை எனக்குப் பிடிக்கவில்லை என்பது அர்த்தமில்லை.

அவள் மிகவும் அமைதியானவள். தேவையின்றி எவருடனும் பேசுவது கிடையாது. வலிந்து வம்பளக்கப்போபவர்களிடம் ஒன்று இரண்டு வார்த்தைகளுக்குமேல் பேசியது கிடையாது. கொழும்பில் இருக்கிருளே என்று கறுப்பு, சிவப்புப் பூசிச் செயற்கை அழகு பண்ணிக் ணிக்கொண்டதே கிடையாது! அப்படித்தான் செய்துகொள்வதற்கு

அவள் அழகில் என்ன சோடையா? பிரமச்சாரிய விரதம் அனுஷ்டிப்பவன் எவனாவது மகேஸ்வரியைக் கண்ட பின்னும் தொடர்ந்து அனுஷ்டிப்பானேயானால் அவன் கர்மவீரன்தான்.

∴ ∴ ∴ ∴

அவள் வீட்டை அடைந்துவிட்டேன். அவளும் என்னை எதிர்பார்த்து வாசலில் நின்றாள்.

சாதாரணமாகவா நின்றாள்?

எனக்குப் பிடித்த அதே சிவப்பு நிற மாலா மணிப்புரி சாரியும் அந்தச் சாரிக்கு ஏற்றாப்போல சிவப்பு ஜக்கெட்டும் அணிந்து, கரு கருவென்ற கடலைபோன்ற கேசத்தை அழகாகப் பின்னி முன்னுக்குவிட்டு, முன்னழகையும் பின்னழகையும் ஒன்றாக ரசிக்கும்படி அப்படி ஒயிலாக அல்லவா நின்றாள்!

என்னைக் கண்டாளோ இல்லையோ ஓடி மறைந்துகொண்டாள்.

பத்து நிமிடங்கள் சென்றுவிட்டன.

அவள் வரவில்லை!

"மகேஸ்......" என்றழைத்ததுதான் தாமதம் மின்னல்போல முன் வந்து நின்றாள். நான் அப்படி அவளை அழைக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஓடி ஒழித்தாளோ என்னவோ?

"இருங்கள்" என்று என்னை அமர்த்திவிட்டுத் தொடர்ந்தாள். "என்ன இன்றுதான் என்னிடம் வருவதற்கு விருப்பு வந்ததோ?" ஒரு கொல்லும் புன்சிரிப்பை உதட்டில் தவழவிட்டுக்கொண்டு கேட்டாள்.

"இல்லை, இன்றும்கூட வசதி இருக்கவில்லை" என்றேன்.

"பின் ஏன் வந்தீர்கள்?"

அவளின் முகம் மாறிவிட்டதைக் கண்டேன்.

"உங்களிடம்தான்" என்றேன் சமாளிப்பதற்காக.

"இருந்துகொள்ளுங்கள்" என்றேன் சமாளிப்பதற்காக.

"இருந்துகொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனவள், இரண்டு தட்டுக்கள் நிறையச் சிற்றுண்டி வகைகளுடன் வந்துசேர்ந்தாள்.

"இவையெல்லாம் எதற்கு?" என்றேன்.

"சாப்பிடத்தான்" என்றாள்.

"எனக்குப் பிடிக்காதே" ஒரு பொய்யைக் கூறினேன்.

"நான் தந்தாற் பிடிக்காதுபோலும்?"

'பளக் பளக்' என்று சாப்பிட்டேன், பேசாமல்.

'க்ளுக் க்ளுக்' என்று சிரித்தாள்.

"இது நன்றாயிருக்கும்" என்று தட்டில் இருந்த கேசரியைத் தன் கையால் எடுத்துத் தந்தாள். பின் தேனீரையும் தந்துவிட்டுக் கேட்டாள்.

"காதலில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?

திடீரென்று அவள் கேட்டது என்னைத் திகைக்க வைத்தது. என்றாலும் சமாளித்துக்கொண்டு பதில் சொன்னேன்: "காதலில் எனக்கு நம்பிக்கையுண்டுதான். ஆனால் அதைவிட 'விதி'யில் எனக்கு அதிக நம்

பிக்கை இருக்கிறது…”

“ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? இரண்டு உள்ளங்களும் ஒன்றிவிட்டால், பின் எந்தச் சக்தியால்தான் பிரிக்கமுடியும்?”

“விதிக்கு எந்தச் சக்தியும் அடிபணியத்தான் வேண்டும்” என்றேன்.

“‘விதியையும் மதியால் வெல்ல முடியும்’ என்கிறுர்களே!”

“இருக்கலாம்; எனக்கு நம்பிக்கையில்லை”

“அப்படியானுல் என் காதலிலும் உங்களுக்கு நம்பிக்கையில்லைத்தானு?”

‘பளீர்’ என்று என் இதயத்தில் அறைந்தது போலிருந்தது.

“தவறு, தவறு — நீங்கள் என்னைத் தப்பாக நினைக்கிறீர்கள்” அதிக அன்பை அவளில் வைத்ததின் தவறை உணர்ந்துகொண்டேன்.

“அப்படியென்ருல் என்னை நீங்கள் ‘நீ’ என்றே அழைக்கவேண்டும்?” என்ருள்.

“ஆகட்டும். நீங்களும் என்னை ‘அண்ணு” என்று அழைக்கவேண்டும்?”

அவளுடைய முகம் பேயறைந்தது போலிருந்தது.

“ஏன் என்னைப் பிடிக்கவில்லையா?”

நன்ருகப் புரிந்துகொண்டேன் — இவளும் என்னைக் காதலிக்கிருள்! உலகமே இப்படித்தான். ஒரு இளம் ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகினுல், அதற்குக் காதல் என்றுதான் அர்த்தமா? ஏன் அது சகோதர அன்பாக இருக்கக் கூடாதா? ஏற்கனவே காதல் எனக்கொரு பாடம் கற்பித்துவிட்டது! இன்னுமா காதல்?

“மகேஸ், உங்களைப் பிடிக்காமலா நெருங்கிப் பழகினேன்? உங்களில் எனக்கு நிறைய நிறைய அன்பு உண்டு. ஆனுல், அது மட்டும் உண்மை காதலில்லை. நான் ஏற்கனவே ஒரு பெண்ணைக் காதலித்து……” நான் முடிப்பதற்குள் அவள் கேட்டாள்.

“ஏற்கனவே காதலித்துவிட்டீர்களா?” துப்பாக்கியிலிருந்து குண்டு கிளம்பியது போலிருந்தது அவள் கேள்வி.

“ஆம் மகேஸ் காதலித்தேன்; பின் கைவிட்டேன்! பாவம் அவள் ஏமாந்துபோனுள்.”

“ஏமாற்றி விட்டீர்களா? கைவிட்டு விட்டீர்களா? ஏன்? அப்பா அம்மா குறுக்கிட்டார்களா? — அவளுடைய குரலில் வெறுப்பும் கசப்பும் குமிழியிட்டன.

“இல்லை. எங்கள் காதலுக்கு யாருமே குறுக்கே நிற்கவில்லை. ஆனுல் ஒன்றுமட்டும் குறுக்கே நின்றது—விதி!”

“நான் விபரமாக அறியக் கூடாதா? அவள் முகத்தில் அனுதாபம் பிறந்தது.

“நீங்களும் ஏன் வீணுகக் கவலைப்படவேண்டும் என்றுதான் தயங்கினேன். விரும்பினுல் சொல்லுகிறேன். அது ஒரு தனிக் கதை.

∴ ∴ ∴ ∴

**செ**ன்ற ஆறுவருடங்களுக்கு முன் எஸ் எஸ். ஸி. படித்துக் கொண்டிருக்கும்போது எமது காதல் முளைதது வளர்ந்தது. என்னை ஒரு நாளைக்குக் காணுதுவிட்டால் உறக்கமே வராது என்பாள். எனக்கோ அவளைக் காணுவிடில் ஊனும் செல்லாது; உறக்கமும் வராது.

காலமும காதலும போட்டியிட்டுக்கொணடு வளர்நதன.

கல்லூரி வாழ்க்கை முடிந்தது. 'உத்தியோகம். உத்தியோகம்' என்று அலைந்தேன். அந்த உத்தியோகமும் கிடைத்து ஒரு வருடமும ஓடிவிடடது.

ஒரு தீபாவளிக்கு முதன்நாள்—தீபாவளிப் பரிசாக ஒரு சாரியும் ஜாக்கெட்டும் வாங்கிக்கொண்டு சைக்கிளில் அவள் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தேன். எனது சிந்தனை முழுவதும் விரைவில் எமக்கு நடக்கவிருந்த கல்யாணத்தைப்பற்றிச் சுற்றிச் சுழன்றது.

விதி கைகொட்டிச் சிரித்தது!

சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அவ்வளவுதான்!

சுயநினைவு பெற்றபோது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கை, கால், மண்டை எங்கும் கட்டுக்கள் போடப்பட்டுக் கிடந்தேன். அருகில் இருந்தவர்களைக் கேட்டபோது மூன்று நாட்களுக்குமுன் ஏற்பட்ட கார்விபத்தின் விளைவு என்றார்கள்.

"யாரந்தப் பெண்?" என்று மகேஸ்வரி இடைமறித்துக்கேட்டாள்.

"பரமேஸ்வரி"

"என்ன, நீங்கள் அந்தக் கணேசனு? அவள் என் தங்கைதான். உங்கள் கதை எனக்குத் தெரியும்" என்று மகேஸ்வரி மிகுந்த வேதனையோடு சொன்னுள்...

ஃ ஃ

அவளும் காதலித்தாள்; இவளும் காதலித்தாள்; நானும் காதலித்தேன்; மூவரும் காதலித்தோம்—ஆனல்......?

அங்கு இனி எனக்கு என்ன அலுவல்?

எழுந்து வாசற்படிகளில் இறங்கிநடந்தேன். எனக்குமட்டும் அந்தவிபத்தின் போது அப்படி ஒரு சத்திர சிகிச்சை நடந்திராவிட்டால், நான் மகேஸ்வரியை என்ன பரமேஸ்வரியையே மணந்திருப்பேனே! வாழக்கொடாதவன் நான்.



# நிறங்கள்

செ. யோகநாதன்

## 1

பச்சை இலைகளிலே தூங்கிக் கிடந்த மலர்கள் இதழ்விரித்து மகரந்தத்தைச் சிந்திச் சிரிக்கக் காலை மலர்கிறது.

தளிர்கள் செங்கொழுந்துகளாய் எரிய மாமரம் அமைதியில் கனவு காணுகிறது. அதன் கபிலநிறக் கரங்களில் கட்டப்பட்ட ஊஞ்சலிலே ஒரு குழந்தை ஆடிக் கொண்டிருக்கின்றது.

மெல்லிய தென்றலின் போக்கிலே சில பழுப்பு இலைகள் மேலும் கீழுமாசத் தாவிப் புழுதியில் படியும்போது எனக்கு மனதிற்குள் வேதனை கொப்பளிக்கிறது. மெல்லிய கண்ணீர்க் கீற்றுகள் என்னையறியாமலே கன்னங்களில் கோடிடுகின்றன. நினைவு ரேகைகள் ஆழப் பதிந்த மனதில் இரத்தம் பீறிடுகின்றது.

ஊஞ்சலில் ஒரு குழந்தை! ஊஞ்சல் ஆடுகின்றது. நான் பின்னாலேயே நிற்கின்றேன். என் நெஞ்சம் அவளோடு எவ்வித்தாவி வருகின்றது. இப்பொழுதுதான், அவள் — என்னுடைய மகள் உடம்பு தேறியிருக்கின்றாள். ஆனாலும் அவள் முன்போல மணமலராயிராமல், நிறத்தின் சாயமிழந்த கடதாசி மலராகவே இருக்கின்றாள்.

அவள் எவ்வளவிற்கு மாறிவிட்டாள்.

அவளுக்குள் எவ்வளவு நிறங்கள்? மனம் அவளுடைய நினைவுகளைக் கவளம் கவளமாக உண்ணுகின்றது.

அடுத்தவீடு பூட்டியிருக்கின்றது. எங்கள் வீட்டின் கதவு திறந்திருந்தாலும் இதயத்தின் கதவு மூடுண்டு புலம்புகின்றது. நாங்கள் மரப்பாவைகள் ஆகிவிட்டோம்.

அவள் ஒரு மலரைப் பறித்து வைத்திருக்கின்றாள். அது ஒரு சிவப்புநிற மலர். அதைக் கன்னங்களோடு அணைத்துக்கொண்டு அவள் அழுகின்றாளா? அவளது கண்கள் வெறித்து உதடுகள் முணுமுணுக்கின்றன. அதுவேதான் அவள் இதயம் சொரியும் கண்ணீரா?

## 2

அழகிய மலர்கள்; மலர்கள்தான் விழிகள். காலடி எடுத்துச் சுவடு பதிக்கும் இடமெல்லாம் களிப்பின் சுவடாகவே பதிகின்றது.

மெல்ல மெல்ல வெண் ஒளிக்கீற்றின் வடிவம் செவ்விதழ்களிடையே அரும்பி அசைய, பிஞ்சுக் கரங்கள் மேலெழுந்து அர்த்தமற்ற சூனியத்தைத் துளாவுகின்றன.

நீருக்குள் ஆழ இறங்கி நீர்ப் பூக்களைப் பறிக்க முயலும் நுண்மை உணர்வுகள் அதன் பிஞ்சு விரல்

களின் அசைவில் உழல்கின்றன.

இருளைக்கிழிக்கலாமா?

அதற்கு அது இருளாகவே தெரியவில்லை. மெல்லிய பவளத்துண்டுகள் பசையற்றுவரண்ட நெஞ்சின் புலம்பலை ஒலி வடிவில் சிந்துகின்றன.

''எச்சுமிவா...வாச்சி''.

பிறகு ஒரு அனுங்கல்.

''இஞ்சேருங்கோ...மாமி இருக்கோ... எச்சுமியைக் காட்டுங்கோ... தெரியல்லையே... உசத்தி... இன்னம் உசத்தி... ஆ... சிரி'டி எச்சுமி...''.

துருத்திபோல நெடுமூச்செறியும் இதயம், எதையோ தேடிப் பறப்பதற்கு பூஞ்சிறகுகள் தேடுகின்றன.

முடிவு மனத் துளக்கம்.

மூளியான எண்ணங்கள்.

பிறகு இருள்; அழுகை; விக்கல்.

''எச்சுமி என்னை விட்டிட்டோ... எச்சுமி...''

புலம்பல்கள் நீள இதயங்கள் அழுகின்றன. நான் சென்று அவளைத் தூக்குகிறேன்.

## 3

அது ஒரு நினைவு. நினைவுகள் அவளையே நிழல்களாகித் தொடர்கின்றன. சிவப்புமலர்கள் இதழ் திறக்க மஞ்சள் மகரந்தம் உதிர்வது போலவே நினைவுப் பூக்களும் நெஞ்சம் அலற உதிர்கின்றன.

ஒரு வஸந்தகாலம்.

அடுத்த வீட்டில் ஒரே மகிழ்ச்சிக் குரல்கள். பக்கத்து வீட்டுக்காரருக்கு குழந்தை பிறந்துவிட்டது.

''பக்கத்து மாமிவீட்டை என்னச்சு?'' பெரிய கிழவியைப்போல நாடிக்கு ஒரு கையையும் இடுப்பிற்கு மற்றொரு கையையும் வைத்துக்கொண்டு என் மகள், என்னைப் பார்த்துக் கேட்கிறாள். கண்கள் எங்கோ ஆழத்தைக் காணும் துடிப்பிலே சுடர்கின்றன.

நான் அவளையே பார்க்கின்றேன். சுடரின் சுடராய், ஒளியின் ஒளியாய் அவளின் கண்கள் கனிவினை உமிழ, அந்தப் பார்வையிலே நான் நனைந்து கொண்டே சொல்கிறேன்: "பக்கத்து மாமி வீட்டை தங்கச்சி பிறந்திருக்காம்''.

''ஓ... அப்ப சோக்கே!"

சனிவின் கண்கள் வியப்பால் கனிகின்றன. எக்காளம் இடும் நெஞ்சத்திற்கு புதிய செய்தி ரசத் துளிகளாகின்றன. பாத கிண்கிணி எழுப்பும் ஒலிகள் என் நெஞ்சிற்குள் இனிமையை அழுத்தி மெழுகுகின்றன

இப்படி, பலமாதங்கள் பூக்களாய் உதிர்கின்றன. எங்கள் வீட்டிற்கும் அடுத்த, வீட்டிற்கும் எல்லையாக மூன்றடி உயரத்தில் ஒரு சின்ன மதில். அந்த மதிலின்மேல் பூச்சாடிகள். செழுமையின் உரத்தால் அச்சாடிகளில் பசிய பின்னணியில் றோஜாமலர்கள் செம்முகங்காட்டிச் சிரிக்கும். அவள் எந்நேரமும் அடுத்த வீட்டிற்குப் போய்விடுவாள். அவளை நாங்கள் ஒருவருடனும் சேரவிடுவதில்லை. அவள் எங்கள் தெய்வம், உயிர். அந்த உயிர் இன்னொரு உயிரோடு ஒட்டி உறவாடவே

அனுமதித்தோம். எந்த நேரமும் தனியே விளையாடிய என்னுடைய மகளை—அந்த அரும்பு தன்னுடைய பிஞ்சுச்சிரிப்பால் – பிஞ்சு முகத்தால். பற்றிக் கொண்டது.

'குட்டி எச்சுமி'. அதுதான் அவள் அந்த அரும்பிற்கு இட்ட பெயர். செம்மை முரசுக்குள் பிஞ்சு விரலைப் பதித்து, கண்கள் மலர, எச்சுமி, என்குழந்தை இராஜாத்தியுடன் என்னவெல்லாமோ பேசுவாள். காலையும், கைகளையும் ஆட்டிக் கொண்டு பொன் மேனியின் சதைகள் புத்தொளிபெற எச்சுமி, இராஜாத்தியை மணிக்கண்களால் இமைகொட்டாது பார்த்துக் கொண்டேயிருப்பாள். வெள்ளை வெளேரென்ற கண்திரையுள் கறுப்பு நிறமணிகள். இராஜாத்தி இதழ்களை. ஆவலில் மலர்த்துகின்றாள்.

''எச்சுமி நீ இந்தளோ... அங்கச்சி...'' கைகள் பருமன் காட்ட நீளும், அதேவேளையில் கண்களும் உதடுகளும் அகல விரியும். பெரிய வேடிக்கையைச் சொல்லி விட்டதாக நினைத்துக்கொண்டு இராஜாத்தி சிரிப்பாள்.

எச்சுமி தூங்கும் பொழுதும் இராஜாத்தி பக்கத்தில் இருப்பாள். தூக்கத்திலே எச்சுமி சிரிப்பாள்' இராஜாத்திக்கு அம்மா முன்பே சொல்லியிருந்தாள்: ''இராஜி சாமி உன்னை நித்திரையிலை அடிக்க நீ அழுவாய்... அப்படித்தான் எல்லா அங்கச்சிக்கும்...''. இராஜாத்திக்கு அதைக்கேட்டால் ஒரே சிரிப்புச் சிரிப்பாகவே வரும். ஆனல் எச்சுமி முகத்தைச் சுழித்துக் கொண்டு வீரிடும் பொழுது அவள் சுவாமியோடு ''கண்ணைக் கட்டிக்கோவம்!'

## 4

குழந்தை உலகத்திற்கு தனியாய் வருகின்றது. மலரான அது மார்போடணைக்கும் மலரின் ஸ்பரிசத்தால் இதயமெங்கும் மகிழ்வுச்சலங்கையொலிக்க உலகில் நீண்ட பாதையைக் காணுகின்றது.

எங்கள் மலரின் இதழ்கள் ஒரு நாள் படபடக்க படுக்கையில் தொய்ந்தது. வானத்தில் தலைகாட்டும் நிலவை யன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டே அதன் கண்கள் அயர்வால் மூடுண்டன.

நான் கண்களை துக்கத்தால் நிறைத்து இதயத்தின் குமுறலோடு இருளிடையே வெதும்புகிறேன். என் மனைவியின் மெல்லிய விம்மல் அணுக்கதிர்களாய் என் நெஞ்சினுள்' புகுந்து கனலைமூட்டுகின்றன.

சிறு சலனத்தை தாங்கமுடியாத நெஞ்சங்கள் இருளறைக்குள் வெந்து துவள்கின்றன.

அவளும் அழுகின்ருள்.
நானும் அழுகின்றேன்.
இன்னெரு குரல்,
''எச்சுமி... என்ரை குட்டி... அச்சா...நீ...அச்சா''

என் இதயம் கிழிகின்றது. நெஞ்சை அமுக்கிக்கொண்டு நிலவைப் பார்த்தபடி விசும்புகின்றேன். என் மனைவி. என் காலடியில் இருந்து தேம்புகின்ருள்.

அவள் எங்கள் மலர்; ஒரேமலர்.
கண்ணீரின் துளும்பலோடு அந்தக் கனவு கலைய இராஜாத்தி எழுந்திருந்து சிணுங்குகின்ருள்.

''இராஜி... என்னம்மா...''

என் மனைவிதான் இராஜியைத் தேற்றுகின்றாள். நான், நானுயில்லாது அழுகின்ற பொழுது அந்த உதிரும் மலருக்குத் தெணறலாக முடியுமா? இருளை எரித்துக் கொண்டு விளக்கு மின்னுகின்றது.

"அம்மா..."

அதே கண்கள்; கனிவின் உயிர்ப்பில் கனிந்த கண்களின் கெஞ்சல்.

நாலுவிழிகள் மலரை மொய்க்கின்றன.

மலரின் விழிகளில் தயக்கம்.

உயிர்ப்பின் சுடரான பார்வை.

"அம்மா... எச்சுமியை நான் பார்க்கோணும்"

எங்களுக்குள் பிரளயம், குருத் தெலும்புகள் எரிகின்றன.

"ஐயோ தெய்வமே!"

அந்தக் குழந்தையின் கண்களிலே மின்னும் ஏக்கத்தின் கணைகளை நாங்கள் எப்படித் தாங்குவோம்? தவிதவித்த அதன் பார்வையை— அதன் தெய்வக் குரலை— அதன் சுடரின் உயிர்ப்பை எப்படி எங்களால் ஏற்கமுடியும்?

நாங்கள் பெரு வெள்ளத்துள் அகப்பட்டு நீர்ச்சுழிகளால் அலைக்கப்படுகின்றோம். மருட்சியின் நிழல் அவள் கண்களிலே. என் இதயத்தை நோக்கி யாரோ கவண் கட்டி எறிந்து......

நான் துன்பத்திலே உறைந்து, துன்பமற்ற மலரை வாரியெடுத்தேன். இன்பமும் துன்பமும் என் கண்களில் நிறமிட்டன. அவள் சிரித்த முகத்தின் காந்தியில் நான் அழ, அவள் சிரிக்க; நான் சிரிக்க அவள் 'சிணுங்கினுள்,

அறப்போகும் நூலின் கடைசி இழையாக அவளுக்கு அவள் தெரியவில்லை. இள அறுகம்புல்லை மேயும் கன்றின் களிமயக்கில் எச்சுமியை அவள் நோக்குகின்றாள்.

அரும்பின் அருகில் மலர்.

எல்லோரும் கண்ணீரில் நனைகிறோம்.

எச்சுமியை அவள் பார்த்துக் கொண்டேயிருக்கின்றாள்.

அவள் இன்பமானாள்.

## 5

"எங்கை... இஞ்சேருங்கோ... மாமி இருக்கோ... எச்சுமியைக்காட்டுங்கோ... தெரியவில்லையே... உசத்தி... இன்னம் உசத்தி... ஆ... அப்பிடித்தான் எச்சுமி சாப்பிட்டியா... டீ... எச்சுமி அச்சா..."

இதே குரல் எங்கள் மூன்றடி மதிலின் அருகில் கேட்கிறது. நோயில் விழுந்தமலர் அந்த மூன்றடி மதிலின் அருகே தன் உயிர்ப்பின் ஒளியை ஒலியாக்கி அழைக்கின்றது, பக்கத்து வீட்டின் பசியகரத்தில் காலைக் கையை ஆட்டிக் கொண்டு சிரிக்கும் அரும்பைப் பார்த்தது. பிறகுதான் இராஜிக்கு மருந்தோ... சாப்பாடோ......

மலர் தனிமையில் சிரிக்கும்.

அழும்.

கதைக்கும்.

தினமும் மதிலின் கரையில் தான் அதன் உயிரும் கண்களும் மலரும்,

ஒரு நாள், மதிற்பூச்செடியில்

ரோஜா மலர்ந்திருக்கிறது. நல்ல செம்மை; இந்திரகோபப் பூச்சியைப் போன்ற இதழடுக்கு.

''எச்சுமி... இஞ்சை... அச்சா'' மதிலின் மேலே அரும்பு ஒளிர மலர் மகிழ்ந்து குலுங்குகின்றது. பிறகு ரோஜா மலரையும் எச்சுமியையும் பார்க்கின்றது; கண்களைச் சுருக்குகின்றது; சிரிக்கின்றது; மெல்லிய கனவோ?

''எச்சுமி... எனக்கு சேப்புச் சட்டை அச்சா...அச்சா...''

அரும்பை ஏந்திய தாயின் கண்கள் பனிக்க நான் இறும்பூதெய்துகின்றேன்.

என்னுடைய குழந்தையோடும் பழகவிடாது கட்டுப்படுத்தினேன். அதனால் முடிக்கும் அதன் வார்த்தைகள் மீண்டும் நெஞ்சுக்குள்ளேயே துவண்டு கருகின. அதனால் தான் எச்சுமியை இராஜாத்தியால் பிரிந்திருக்க முடியவில்லை.

யன்னலோரம், வெளியே செல்லும் சிறுவர்களைப் பார்த்தபடியே இராஜி ஏங்கினால் என்ன? சேரியின் கெட்ட சகவாசம் அவளுக்கு வேண்டாம். என்னுடைய மலர்; என் மனைவியினுடைய மலர்; அவள் புழுதியில் படியக் கூடாதவள்.

மதிலின் ஓரத்தில் இராஜி நிற்கிறாள். ''இஞ்சேருங்கோ...''

பிறகு குரல் இல்லை.

தயக்கமே ஒலிக்கின்றது: ''மாமி''...

''என்னம்மா...''

மதிற்கரையில், உருகும் தாய்மைக்குரல். ''மாமி... எங்கடை எச்சுமியை என்ரை கையிலை ஒருக்கா தாறீங்களா?... மாமி... என்னாலை எச்சியிட்டை வரேலா...கால் நோவுது கைநோவுது... வயிறு எரியுது ... நானும் எச்சுமியைப்பார்த்து... நானு சொலறன் தாறியளா?''

அவள் விக்குகின்றாள்.

தன் துடிப்பை, தன் வலிப்பை அது தன் உயிர்ப்பிற்கு ஒளியாகும் ஒன்றிற்கே சொல்லத்துடிக்கின்றது அது அழுகின்றது.

அவளுடைய பார்வை மதிலுக்கு கீழாக இறங்காது குத்திடுகின்றது.

எங்கள் நெஞ்சிற்குள் கொள்ளி நெருப்பு செருகப்பட்டதுடிப்பு.

## 6

சோதிக்கும் அந்தச் சின்னமடியில், விரல்களை முரசிற்குள் துளாவிக்கொண்டு கிடக்கிறாள் எச்சுமி இராஜி சிரிக்கின்றாள்.

''எச்சுமிக்கு சோப்புச் சட்டை சோக்கு... எச்சுமிக்கு கறுப்புப் பொட்டு அச்சா. எச்சுமியின் சொத்தையிலை கறுப்புப் பொட்டு எச்சுமி நெனக்கு உடம்பு நோவு... நீ சோமாயிரு... நீ சோமாயிரு. எச்சுமி உனக்கு பாடட்டோ''

கைகள் அவளை வருட, குரல் எங்கள் நெஞ்சை வருடுகின்றது.

எச்சுமி சிரிக்கிறாள்.

இராஜி அவளைக் கொஞ்சுகிறாள்.

ஓராண்டுகாலம் இணைந்த அன்பிலே, அந்தப் பிஞ்சுகள் களித்த களிப்பிலே, உடலையும் உள்ளத்தையும் மறந்த லயிப்பிலே நாங்கள்

தூசிலும் தூசாகி நிற்கின்றோம்.

ஒருநாள் புயல் வந்துவிட்டது.

பக்கத்து வீட்டுக்காரருக்கு வேலை மாற்றம். அன்றே போகவேண்டும்.

இராஜி அதை அறிந்துவிட்டாள்.

பாதகிண்கிணி அலறியது.

தாராக்குஞ்சைப்போல, அவள் தத்துப் பித்திக்கொண்டு அடுத்தவீட்டிற்கு ஓடினாள்.

நானும் அவள் பின்னால் ஓடினேன்.

"எச்சுமி என்னோட்டை வாடீ"

இராஜி எச்சுமியை வாரி அள்ளினாள்.

எச்சுமி வீரிட்டலறினாள்.

தைத்துள்ள முள்ளை எடுக்கும் மெதுமை இராஜாத்தியின் கரங்களிலே, உதித்தெழுந்த நிலவுபோலமுகம் ஜ்வலிக்கின்றது.

"எச்சுமி... எச்சுமி... என்னோட்டை வாம்மா... என்னட்டை சோப்புப்பூ... சோப்புக்கல்லு... சோப்பு இனிப்பு"

குரல் மெலிவடைகின்றது.

மனம் இமைக்கவில்லை.

ஓடிய வேகக் களைப்பில் இராஜாத்தி விதிர்விதிர்க்கிறாள்.

வேர்வை, அவள் உடலெங்கும் பொங்கியது.

எச்சுமி அவளைப் பார்த்துக் காலைக் கையை ஆட்டிச் சிரித்தாள். உடனே ராஜி குதித்தாள்.

"எச்சி... எச்சுமி என்னோடை வாரு..."

கிழிந்த வார்த்தைகள் வெளிவர முன் அவள் மயங்கிவிட்டாள். நான் அவளைத் தூக்கிக்கொண்டு ஓடினேன்.

என் கண்களுக்குள் எத்தனை நிறங்கள்?

சிவப்பு.

வெள்ளை.

நீலம்.

கறுப்பு.

ஐயோ! கறுப்பா! கறுப்பென்றால்?

திரும்பி வரும்பொழுது அடுத்த வீடு பூட்டியிருந்தது.

பாத கிண்கிணிகள் நெஞ்சிற்குள்ளேயே இழைந்து ஒலிக்கின்றன.

## 7

நடு இரவு.

எங்கிருந்தோ மெல்லிய விசும்பல்.

"எச்சுமி... இதோ... உசத்தி... தெரியல்லையே இன்னும் உசத்தி... அச்சா... இந்தா சோப்புச்சட்டை... சோப்புக் கல்லு... சோப்பு இனிப்பு... வாடீ... என்கூட ஒடியாந்துடு..."

நான் துள்ளி எழுந்தேன்.

விளக்குகள் மின்னவில்லை.

இராஜி?

யாரோ என் மண்டையில் இரும்புலக்கையால் அடித்தாற்போல நான் பதறினேன். நெஞ்சிற்குள் ஆயிரமாயிரம் விஷச் சுரங்கள்.

"இராஜி... இராஜி..."

அவளின் படுக்கை வெறுமையில் கிடந்தது.

என்னுடைய கண்கள் இருளைத் துளாவ — மதில் ஓரத்திலே இரண்டு கற்கள்—அழிவு கற்கள் கிடந்தன

அதன்மேல் கால்களை வைத்து இராஜி மதிலில் ஏறி...

நான்...

"ஐயோ... அம்மா..."

நெஞ்சமும் வீடும் கிடுகிடுத்தன.

"எச்சுமி ஓடியா...?

அவள் அலறினாள்; பின் விழுந்...

நான் கூவிக்கொண்டு அலறினேன். திண்ணிய இருளில் ஒளித் தலைகள் தோன்றின. நான் நெய் பூசிய தரையில் சறுக்கியவன்போல தலைகீழாய்ச் சுழல்கிறேன், உலகமே எக்காளமிடுகிறது.

சிறகுகள் எரிந்த நாற்றம்.

## 8

என்மகள் இராஜி இதோ கிடக்கின்றாள்...

தன் உயிரின் சுடருக்கு அவள் கொண்டுசென்ற சிவப்பு இனிப்பு... சிவப்புச் சட்டை... சிவப்புக் கல்லு... சிவப்புப் பூக்கள்......

என் வநெஞ்சில் ஒன்றும் இல்லை. மூண்டுகிடந்து எரிந்த தீயின் இறுதிச் சுடரும் சோதியுள் சோதியானது...

"அச்சா... அச்சா... எச்சுமி என்னோடை வாறு?'

இராஜி—

நீ என்ன நிறம்?

சிவப்பா?

வெள்ளையா?

நீலமா?

கறுப்பா......?

"இல்லை மகளே! கறுப்பென்றால் மரணமடி! நீ... நீ சாந்தியடி... சாந்திக்கு என்ன நிறம்? வெள்ளையா? பச்சையா?

எண்ணமுடியாத தூரம் அவள். என்னிடம் தான் இல்லை என்ற தவிப்பில் அவள் கண்களை மூடிக் கொண்டு கிடக்கிறாள். முன்பு அவள் பொய் நித்திரை கொள்ளும்போது நான் அவளுடைய காதுக்குள் தும்பு விட்டுக் 'கிக்கிளு' மூட்டுவேன்!

இனி!

மதிலில் இரு கரங்களிடையே ஒரு அரும்பு...

மதில் ஓரத்திலே..

வெறுமை... வெறுமை...

---

**நிறங்கள்:** பிஞ்சுக் குழந்தைகட் கிடையில் பாசம் மலர்கின்றது. அந்த வீட்டுக் குழந்தை எங்கோ செல்ல, இந்த வீட்டுக் குழந்தை எங்கு செல்கின்றது? குழந்தைகளின் மனத்தத்துவத்தை நன்கு தெரிந்து வைத்திருக்கும் யோகநாதன் தனக்கே உரித்தான தனி நடையில் சுவை ததும்பக் கதையைச் சொல்கின்றார். "வீரகேசரி"யில் வெளியான நிறங்களின் வர்ணம் வேறு; இந்த நிறங்களின் வர்ணம் வேறு.

# வாழ்க்கையும்

பேராசிரியர் அ. சீனிவாசராக வன் M. A. அவர்கள் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர்; ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிக்கவர்; நல்ல விமர்சகர்; "நாணல்" என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதி வருபவர், சென்ற மாதம் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்ற மகாநாட்டில் தலைமைவகித்துப் பேசிய கருத்துக்களைத் தொகுத்து இங்கே வெளியிடுகின்றோம், இதற்கு வாய்ப்பளித்த சென்னை தினமணி அலுவலகத்தினர்க்கு எமது நன்றி உரியது.

# இலக்கியமும்

## ஒற்றுமை

**அ. சீனிவாசராகவன் M. A.**

எழுத்தாளருக்குள்ளே அமைய வேண்டிய ஒற்றுமையைப் பற்றி பேசுகிறோம். அவ்வொற்றுமையை வரவேற்கிறோம். ஆனால் எழுத்தாளர் அனைவரும் ஒரே இலக்கியத் துறையில் ஒரே கருத்தை வெளியிட வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. 'எழுத்தாளன்' என்ற சொல்லுக்கு, இலக்கியத்தைப் படைக்கிறவன் என்பதே பொருள். பல நாட்டுச் செய்தியை மக்களுக்குத் தெரிவிக்கும் பணியாற்றுகிறவர்கள், தொகை நூல் திரட்டுவோர், நூல்களைப் பதிப்பிடுவோர், நிருபர்கள் பாட புத்தகம் எழுதுவோர், இவர்களும் இவர்களைப் போன்றாரும், பொதுவாக எழுத்தாளர்களே. என்றாலும் இவர்களை இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களாகக் கருதுவது இல்லை இவர்கள் பணி உயர்ந்தது; சமுதாயத்திற்கு இன்றியமையாதது; ஒப்புக் கொள்கிறோம். ஆனால் இவர்களுடைய எழுத்தின் தன்மை வேறு; இளங்கோவின் கண்ணகி, கம்பனுடைய இராமன், ஷேக்ஸ்பியரின் ஹாம்லத், தாகூரின் ஊர்வசி போன்ற படைப்புகளைத் தரும் எழுத்தின் தன்மை வேறு. பின்னதையே படைப்பிலக்கியம், சிருஷ்டி இலக்கியம் என்று பேசுகிறோம். கவிதை, சிறுகதை, நாடகம், நாவல், திறனாய்வுபோன்ற படைப்பிலக்கியத் துறைகளில் பணிபுரியும் எழுத்தாளர்களையே, இந்தச் சந்தர்ப்பத்தில் எழுத்தாளர்கள் என்று கருதுகிறோம்.

எழுத்தாளன் ஒருவனுடைய தனித் தன்மையே படைப்பு இலக்கியத்தின் உயிர்நாடி. இது இல்லையென்றால் இலக்கியம் என்ற நற்கலை இல்லை. சொல்லை வளைத்துத் தன் மயமாக்கும் எழுத்தாளனுடைய முடியா நெடுஞ்சாதனை, அவனுடைய உள்ளத் தனி வெளியைத்தான் அரங்காகக் கொண்டு இயங்குகிறது. இந்தச் சாதனையின் விளைவே இலக்கியம். ஆக தனித்துவத்தின் வளர்ச்சிக்காக உலகோடு உறவு, அது திரண்டு இலக்கியக் கலையாக எழுத்தில் வெளிவருவதற்காக தனிமை— இவ்விரு முரணான நிலைகளையும், எழுத்தாளன் வாழ்க்கையிலே காண்கின்றோம். இத் தனித்துவம் சிதைந்தால் இலக்கியத்தின் தரமும் பாதிக்கப்படும் என்பதையும் உணருகிறோம். இந்த அடிப்படைக் கருத்தின் வரம்புக்குள்ளே தான் எழுத்தாளர் சங்கங்களின் ஒற்றுமை உருவாக வேண்டும்.

### நற் சங்க இயல்பு

அவரவர்க்கான வெவ்வெறு தனி அனுபவங்களை, அவரவர்க்கான தனி முறையில் வெளியிடும் எழுத்தாளர்களோடு நாம பழகுவதில் அவர்கள் கருத்திற்கும்,சிந்தனைப் போக்கிற்கும் பார்வைக்கும் மதிப்புத் தருவதில் நாம் நம்முடைய தனிப் பண்பின் திறலைப் பெருக்கிக் கொள்கிறோம். இது நல்லமுறையில் செயல்படும் எழுத்தாளர் சங்கம் அளிக்கின்ற ஒரு பெரு வாய்ப்பு.

வெவ்வேறு மொழி இலக்கிய எழுத்தாளர்களோடு அங்கங்கே தொடர்புகொண்டு, அதனாற் பெறுகின்ற புதிய உணர்ச்சிகள்,

கருத்துக்கள், இலக்கிய உத்திகள் இவற்றைத் தமிழ் எழுத்துலகிற்கு வழங்கும் புதுமை வள்ளல்களாகவும் அமைவார்கள். இதனால் தமிழும் அதன் இலக்கியமும் செழுமையுறும் என்பதில் ஐயமில்லை.

பொருளாதார நலத்தைப்பேணும் சாதனமாக எழுத்தாளர் சங்கம் பணியாற்றக்கூடும்; பணியாற்ற வேண்டும். பதிப்புரிமை, பட உரிமை ஒலிபரப்பு உரிமை முதலிய பல எழுத்துரிமைகளை எழுத்தாளனுக்குச் சாதகமாக விரிவாக்குவதிலும் அவற்றை எழுத்தாளன் சார்பில் வலியுறுத்துவதிலும் எழுத்தாளர் சங்கம் செயல்படலாம்; படவும் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, எழுத்துச் சுதந்திரத்தை எச்சரிக்கையோடு பாதுகாக்கும் காவலாளனாகவும், இதனால் நேரடியாக இல்லாவிட்டாலும் வினைவின் சார்பால் மறைமுகமாக ஜனநாயகத்தின் அரண்களில் ஒன்றாகவும் எழுத்தாளர் சங்கம் இயங்கலாம்; இயங்கவும் வேண்டும். இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் செய்வதற்கு பிரதிநிதித்துவம் வாய்ந்த தமிழ்ச்சங்கம் தேவை. அதாவது எழுத்தைப் பொறுத்தவரையில் நமது பெருமன்றம் தேவை.

## மானிடம் வெல்கிறது

சங்க காலத்திற்குப் பிறகு, பாரதி காலம் வரையில், தமிழ் இலக்கியம் பெரும்பாலும் சமயச் சார்புடையதாகவே அமைந்தது. இதனால் அவ்இலக்கியத்தின் இப்பகுதி முழுவதும் உலக வாழ்க்கையை மறுத்தது என்றோ, அதிலிருந்து ஒதுங்கி நின்றது என்றோ, அதைத் துறந்துநிற்பதையே நெடுகிலும் வற்புறுத்தியது என்றோ முடிவுகட்டிவிட முடியாது. ஒரு சில நூல்கள் இதைச்செய்தன உண்மைதான் என்றாலும் மனித வாழ்க்கையின் உறுதிப் பொருள்களான அழகு, அறிவு, அன்பு, அறம் என்பனவற்றைப் பலப்பல நூல்கள் அவை சமயநூல்களாக இருந்தபோதிலும் மிக அழுத்தமாகப் பேசியும் உள்ளன.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்க்கையின் மையத்தைக் கடவுளிடமிருந்து மனிதனுக்குத் திருப்பும் முயற்சி தமிழிலக்கியத்தில் தோன்றியது; இன்றுவரை வளர்ந்தும் வந்துள்ளது. இது சரியா தவறா என்றும் இங்கு நான் ஆராயப்போவதில்லை. ஆனால் இதனால் ஏற்பட்டுள்ள இலக்கிய விளைவுகளை எண்ணிப் பார்ப்பது நம்முடைய கடமையாகிறது. மனிதனைப்பற்றி, தன்னைத் தானே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உருவாக்கி வந்துள்ள அந்த உயிர்த்திடலைப்பற்றி, அதற்கு அப்பாலுள்ள எதனோடும் அதைத் தொடர்பு படுத்தாமல், காரண காரியங்கள் அனைத்தையும் வெயிலுக்கும் நிழலுக்கும் இடையிலே சுழல்கின்ற இந்தத் தாரகைத் தூசிக்குள்ளேயே காணமுயன்று, அதைச் சொல்லிலே வலைவீசிப் பிடிக்க முற்படும் தனித்தனி மனிதர்களின் சாதனையாகத் தமிழ் இலக்கியம் இன்று உருப்பெற்று வருகிறது. வாழ்க்கையோடு ஒட்டிய எதுவும் — அண்ட கோளங்களைத்தொடும் சாதனையிலிருந்து கூழுக்கு உயிரைப் பிழிந்து குறுக்கை ஒடிக்கும் சிறுமைவரையில் பொரு

ளாதாரம், அரசியல், சமுதாயமரபு, சட்டம், நீதி, உரிமை, கடமை, அழகு, வண்ணப்பூச்சி யின் சிறகு, வானத்தின் ஆழங்காணு நெடும்பிலம், கருப்பு னுடைய காதல், கடவுள், ஆம் கடவுள்கூட—மனிதனுடைய அலகில்லா உள்ளத்தின் கருவாகச் சொல்லில், நேருக்குநேர் நின்று தீரமாகப் பேசும் சொல்லில் - வடிவாகத் தலைப்பட்டது. இத்தனையையும் பேசுவதற்கேற்ற புதிய இலக்கியத் துறைகளும், நடைகளும் தோன்றி உள்ளன. சொல்லும், செய்யுள் வரையறைக்குள் அடங்கிக் கிடந்தால்தான் இலக்கியமாகும் என்ற நிபந்தனையிலிருந்து தன்னை முழுவதும் விடுவித்துக்கொண்டது. ஒருசில எழுத்தாளர் பாரதியாரைப் போன்றவர்கள் வாழ்க்கையின் மணிமுடி 'மனித' என்ற தத்துவத்தையும், கடவுளே வாழ்க்கையின் அடிப்படையும், பொருளும் என்ற தத்துவத்தையும் இணைத்துக் குரல்கொடுத்தனர். வேறுசிலர் கடவுளைப்பற்றி இப்போது கவலைப்படவேண்டாம். கந்தசாமியைப்பற்றி எண்ணினுற் போதும். அவன்தான் எல்லையற்ற விசித்திரமாகக் காப்பிக்கடையிலிருந்து காலாதீதப் பெருவளைவு வரையில் விரிந்து, பரந்து விசுவரூபமாக நிற்கிருனே. அவனைச் சிறிது கண்டாற்போதும், காட்டினுற் போதும் என்று எழுதுகோலை ஓட்டினுர்கள்.

## இலக்கியப் பண்பு

'எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம்' என்ருர் பாரதியார். இவர்களோ, தெய்வமா? அதுபற்றித் தெரியாது. தெய்வம் இந்த எழுதுகோலாகவும் எழுத்தாகவும் உள்ளது என்பதைவிட, எழுதுகோலே தெய்வம், இந்த எழுத்தே தெய்வம் என்று எண்ணுவதே எங்களால் இயலும். அதுவே உண்மை என்று மனிதனை நோக்கியே தமது பார்வையை எழுத்தைத் திருப்பினுர்கள். இதனுல் சமயப்பொருளும் மரபும் தமிழ் இலக்கியத்தில் பெற்றிருந்த ஆதிக்கம் சிறிது மங்கியது. இவற்றைப் புறக்கணிப்பது மாத்திரமின்றி, தாக்குவதே அறிவுக்குப் பொருந்தும் என்றுகூறச் சிலர் எண்ணவும் எழுதவும் தலைப்பட்டார்கள். இப்படியெல்லாம் தமிழ் எழுத்துலகம் புதிய திருப்பம் ஒன்றைப் பெறுவதற்குக் காரணங்கள் பல. அவற்றைத் தொடர்வது இங்கே சாத்தியமில்லை. மனிதனே வாழ்க்கையின் மையம் என்ற அடிப்படையில் இன்றைய தமிழ் இலக்கியத்தின் பெரும் பகுதி படைக்கப்பெற்று வருகிறது. அதை ஒப்புக்கொள்ளவேண்டும். இதனுல் அதற்குப் புதிய வளமும் துடிப்பும் வளர்ச்சியும் துறை, நடை இவற்றின் பெருக்கமும், வாழ்க்கையோடு பிணைப்பும் விளைந்துள்ளன. சமயமும் மனித உள்ளத்தை ஆட்கொள்ள, சக்திகளில் ஒன்றுதானே சிறப்பாக இந்தநாட்டு இலக்கிய கலாசார மேன்மைக்குச் சான்றுதானே. மனிதனே வாழ்க்கையின் அச்சு என்று கொண்டாலும் உண்மையை - அடிப்படையான உண்மையைக் கடந்துநின்று யாவற்றையும் தனக்குள் அடக்கும் உண்மையை - மனிதன் தேடிச்சென்ற, செல்கின்ற பயணமும், அவனுடைய வாழ்க்கையில் ஒருபகுதிதானே இந்தப் பயணமும் ஏன் இலக்கியத்தில் இடம்பெறலாகாது? பெறுவதுதானே. மனி

தனே சத்தியம் என்ற கொள்கைக்கு உகந்தது என்று எண்ணுகிறவர்களும் இல்லாமல் இல்லை. ஆக தமிழ் இலக்கியத்தின் தொன்மையான மரபுகளை அடியோடு கைவிடாமல் அவற்றையும் தன் புதிய ஆற்றலின் துணையாகக்கொண்டு இன்றைய தமிழ் எழுத்து இயங்கும் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.

## மக்களுக்காக எழுத்து

'மக்களுக்காக எழுதுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு அதற்காகத் தன்னுடைய தனித்துவத்தை எழுத்தாளன் இழந்துவிட்டால் அது அவன் எழுத்தை இலக்கியநிலையிலிருந்து பிரித்து வெறும் வியாபாரமாக்கிவிடுகிறது. மக்களிலக்கியத்தின் சிறந்த பண்புகள் எளிமையும் உயிராற்றலும். அந்த இலக்கியம் பெரும்பாலோர்க்கும் பொதுவான வாழ்க்கைப் பகுதியை ஒட்டியே இயங்கமுடியும். அப்படி உருவாகும் இலக்கியம், உயிர்த்துடிப்பும் நேருக்கு நேர் பேசுகின்ற பாங்கும், தெளிவும், மனித பண்பின் பொதுவான அம்சங்களை விவரிக்கின்ற திறனும் பெற்று விளங்குகின்றது, கடந்த 30 ஆண்டுகளில் தமிழ் இலக்கியம் இப்பண்புகளையெல்லாம் பெற்றிருக்கிறது.

மக்களைக் கவரும் வகையில் எழுதுவதை நான் வரவேற்கிறேன். 'கலை கலைக்காகவேதான்' என்ற கொள்கையில் எனக்கு நம்பிக்கையில்லை. அதுபோலவே 'கலை பிறருக்காகத்தான்' என்ற கொள்கையையும் என்னல் ஏற்கமுடியவில்லை. உயர்ந்த கலையில் கலைஞனுடைய தனித்துவமும், மக்கள் நெஞ்சை அள்ளும் பாங்கும் ஒரே சமயத்தில் நிறைந்திருக்கமுடியும். ஆகவே எழுத்தாளன் மக்களிடமிருந்து அவர்களது அல்லது தன்னுடைய அன்றாடவாழ்க்கையிலிருந்து ஒதுங்கி வாழவேண்டிய அவசியமில்லை. அந்த வாழ்க்கையின் பிடிப்பிலிருந்துகொண்டே அதன் கணிசமான பகுதியை அவன் சுவைத்தாற்தான் அவனல் அதைப் புரிந்துகொள்ளவோ, எழுத்திலே வடித்துத்தரவோ இயலும்.

## உள்ளது உள்ளபடி

கருத்துவாதத்திற்கும், யதார்த்த வாதத்திற்கும் எத்தனையோ காலமாக நடந்துவருகின்ற ஓயாதபோர் இன்றும் தமிழ் இலக்கிய உலகில் நடைபெறுகிறது. வாழ்க்கையில் உள்ளதை, உள்ளபடியே பேசவேண்டும் எழுத்துலகில்காட்ட வேண்டும் என்பது ஒரு கட்சி. இது யதார்த்தவாதம். மற்ருெரு கட்சி உள்ளதை உள்ளபடி சொல்வதிலே என்ன பெருமையுண்டு? என்ன பயனுண்டு? சிறந்த இலட்சியங்கள் ஒளிவீசுகின்ற அற்புதமாக வாழ்க்கையைச் சித்தரிப்பதால் மட்டுமே, துயரில் உழலும் மக்களுக்கு ஆறுதல் தருகிருேம். அவர்களை லட்சியத்தைநோக்கி நடத்துகிருேம். உள்ளதை உள்ளபடியே அன்று கருத்தினல், லட்சியத்தினல், கற்பனையினல் செப்பம்செய்து தருவதே இலக்கியம்' என்று பேசுகிறது மற்ருெரு கட்சி. இது கருத்துவாதம் அல்லது இலட்சியவாதம்.

யதார்த்த வாதத்தை எடுத்துக்கொள்வோம். வாழ்க்கை இல்லையென்ருல் இலக்கியம் இல்லை, ஆகவே வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுதான் இலக்கியம் என்று இலக்கிய யதார்த்த

வாதிகள் பேசுவதிலே உண்மையிருக்கிறது. வாழ்க்கையைக் காண்கிருேம். நேருக்குநேர் காண்கிருேம் என்ற உணர்ச்சியைத் தருவதற்குத் தவறுகின்ற எழுத்து எப்படி வாழ்க்கையைப் பிரதிபலிக்க முடியும்? நியாயமான கேள்வி. ஆனல் இந்தக் கேள்வியில் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது என்ற சொற்ருெடர்தான் முக்கியமானது, வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற கண்ணுடி, எழுத்தாளனது இதயம். வாழ்க்கையின்றி இலக்கியமில்லே. அதுபோலவே, அதைப் பிரதிபலிக்கும் எழுத்தாளனுடைய இதயம் இல்லேயென்ருலும் இலக்கியமில்லே. தமிழைப் பொறுத்தவரையில் யதார்த்தவாதிகள் உள்ளதை உள்ளபடி என்ற தம்முடைய வாதத்திற்கு எடுத்துக்காட்டாக சங்க இலக்கியத்தைக் குறிப்பிடுகிருர்கள். சங்க இலக்கியப் புலவன் புறவுலகப் பொருள்களே, நிகழ்ச்சிகளே மிக நுட்பமாகவும் அருமையாகவும் நேருக்குநேர் நாம் காண்பது போலவும் சித்தரிக்கிருன். ஆனல் அவன் ஒரு கவிஞன், இலக்கியகர்த்தா. அவன் கண்ட வாழ்க்கை அவன் நெஞ்சிலே தோய்ந்துதான். அந்த நெஞ்ச ஈரத்தோடுதான் நம்மை அடைகிறது. அதனல்தான் இலக்கியமாகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது

## உள்ளது உள்ளபடி எனில் எது?

வறுமை, துயரம், தாழ்வு, இழிவு ஆகியவற்றைப் பற்றியே பேசுவது தான் உள்ளதை உள்ளபடி கூறுவது என்ற எண்ணமும் தவறு. தொழுநோயாளி ஒருவனுடைய புண் எவ்வளவு கண்கூடான உண்மையோ அவ்வளவுக்குப் புத்தன் காட்டிய கருணேயும் உண்மைதான். ஒனறு கசப்பான பயங்கரமான உண்மை. மற்ருென்று அந்த உண்மையைக் கண்டு உருகிய அன்புள்ளத்தின் பெருமையும் மனித குலத்தின் மேன்மையும் சமைத்த உண்மை. இரண்டுமே எழுத்தாளன் மனத்தில் ஆழ்ந்த உணர்ச்சிகளே விளேவிக்கக் கூடியவை. ஒன்றைப்பற்றிமட்டும் பேசுவதுதான் இலக்கியம். மற்ருென்று இலக்கியத்தின் பொருளாகாதென்று நினேப்பது தவறு. யதார்த்தவாதம் மனித உள்ளத்தின் பெருமையை மறந்து, கசப்பையும் வெறுப்பையும் இழிவையும் மட்டுமே பேசத்தலேப்பட்டால் அது வாழ்க்கையைப்பற்றிய முழு உண்மையாகாது. உள்ளத்தை உள்ளபடி கூறுவதாகச் சொல்லிக்கொண்டு, உள்ளத்தழுக்கையும், உடலின் குறையையும் சமுதாய அமைப்பில் உள்ள தவற்றையும் மட்டுமே பேசினல், பேசும்போதும், தன் உள்ளத்தோடு தொடர்பில்லாமல், உள்ளது உள்ளபடியே பேசினல், அந்தப் பேச்சு வெறும் சாக்கடை ஆராய்ச்சியாகிவிடும்; இலக்கியமாகாது. அதுபோலவே அன்பு அழகு என்று மேலெழுந்தவாருகப் பேசிக்கொண்டு, மனித வாழ்க்கையிலே உள்ள புண்களே மூடி மறைத்து பிறரையும் தம்மையும் கற்பனேப் போதையினுலேயே ஏமாற்றிக்கொள்ளுவதும் கருத்துவாதமாகாது; இலக்கியமுமாகாது உள்ளதை அது வெளியுலகிலுள்ளதோ உள்ளுலகிலுள்ளதோ ஒரு தனி மனிதன் உணர்ந்து அந்த உணர்ச்சியின்படியே

பேசுவதுதான் இலக்கியம். இந்தச் சாதனையில் யதார்த்தவாதி புற உலகுக்கு அழுத்தம் தருகிறான். கருத்துவாதி தன்னுடைய உள்ளத்துக் கற்பனைக் கருத்துக்கும், அதிக இடம் தருகிறான். இருவருமே உள்ளதை எழுதவேண்டும். அதை உணர்ந்தபடி எழுதவேண்டும். இந்த வரம்புக்குள் யதார்த்த வாதிக்கும் இடமுண்டு; கருத்துவாதிக்கும் இடமுண்டு. இன்றைய தமிழ் எழுத்தாளர் பலர் இதை உணர்ந்திருக்கிறார்கள் மிக அருமையான எழுத்துக்களைப் பல்வேறு இலக்கியத்துறைகளில் படைத்தும் வருகிறார்கள். இதைப்பார்த்துப் பெருமையடைகிறேன். தமிழில் படைப்பிலக்கியத்திற்கு மிகச்சிறந்த எதிர்காலம் தமிழின் தொன்மையான சிறப்புக்குச் சற்றும் குறையாத ஒருகாலம் திண்ணமாக உண்டு என்று நம்புகிறேன்.

பாரதி பாடியது உண்மை. வானமளந்ததனைத்தும் அளந்து நம்முடைய தமிழ்நிற்கும். அதன் ஆற்றல் வாய்ந்த சொற்கள் மனித உள்ளத்தின் அருமை முழுவதையும் வெளியிடும் தமிழிலக்கியம் மனிதனால் அளக்கக்கூடிய உயர்வு அனைத்தையும் முன்னினும் அதிகமாகச் சொல்லில் வடித்துத்தரும்; மனித இனத்துக்கே வழிகாட்டும் இதுவே என் நம்பிக்கை. இதுவே எழுத்தாளர்களாகிய நம்முடைய இலட்சியம்.


உங்கள் துணிகள்

வெண்மையாகவும்

பிரகாசமாகவும்

விளங்க

# யாழ் சோப்

உபயோகியுங்கள்.

**யாழ் சோப்**

தரத்தில் சிறந்தது.

அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு

**பல மடங்கு லாபம் கிடைக்கிறது.**




ச. கணபதிப்பிள்ளை, வேலணை வடக்கு,

கே: ரஷ்யாவில் எச்மதம் அநேகரால் கைக்கொள்ளப்படுகின்றது?

ப: சம்-மதம்! தலைவர்கள் எதைச் சொன்னாலும் மக்கள் 'சம்மதம்' என்று சொல்லவேண்டியதுதான்!

க. இரத்தினசிங்கம் கணேசபுரம், கிளிநொச்சி.

கே: திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம்; பொன்னு தங்கன்; மு. தளையசிங்கம், மு. பொன்னம்பலம்—இந்த அறு ஈழத்து எழுத்தாளர்களைப்பற்றியும் உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: மூன்று சோடி சகோதரர்களைக் குறிப்பிட்டிருக்கிறீர்களே! திமிலைத் துமிலன் நல்ல கவிஞர்; மறுக்கமுடியாது. ஆனால் நெடுகிலும் தாழிசைகளும் வரிப்பாடல்களும் எழுதிக்கொண்டிராது மற்றைய கவி உருவங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். திமிலை மகாலிங்கத்தைப் பற்றிச் சரியாகச் சொல்வதற்கு இன்னுஞ் சில நாட்கள் போகட்டும். முயற்சி எடுத்தால் முன்னுக்கு வரக்கூடிய கவிஞர்; "பொன்னு"வும் "தங்க"னும் பல சிறுகதைகளைப் படைத்திருக்கின்றார்கள். ஆனால், முன்னவரின் "கண்ணே, சாரதா"வும் பின்னவரின் "சருகு"ம் மட்டுமே நினைவில் நிற்கின்றன, தளையசிங்கம் இப்போதைய சிறந்த சிறுகதை எழுத்தாளருள் ஒருவர்; சோகக் கதைகளையும் ஹாஸ்ய நடையில் எழுதி வெற்றி கண்டவர். பொன்னம்பலத்தின் சிறுகதைகளிலும் பார்க்க, கவிதைகள் தரத்தில் உயர்ந்தவை. சில வாரங்களுக்கு முன் 'வீர கேசரி''யில் வெளியான 'காற்று' குறிப்பிடத்தக்க சிறந்த கவிதை.

இராஜு, நெல்லியடி, கரவெட்டி.

கே: படிப்பியாமல் சோம்பேறிகளாய் இருக்கும் ஆசிரியர்களை என்ன செய்யலாம்?

ப: பாடசாலைப் பரிசோதகர்களாக Inspectors of Schools) ஆக்கலாம்!

கே: கலைச்செல்வி எத்தனையாம் ஆண்டு தொடங்கியது?

ப: 1958ம் ஆண்டு என்பதை எந்தக் குழந்தையும் 'பட்' டென்று சொல்லிவிடுமே!

கே: ஆண்களுக்குத் துரோகம் செய்யும் பெண்களைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?

ப. பெண்களுக்குத் துரோகம் செய்யும் ஆண்களைப பற்றிய தங்கள் கருத்து எதுவோ, அதுவேதான் இவ்விஷயத்தில் என் கருத்தும்.

இ. இராஜசிங்கம் தும்பளை, பருத்தித்துறை.

கே: ஒரு பத்திரிகை ஆசிரியர் இன்னொரு பத்திரிகையைத் தூற்றலாமா?

ப; தூற்றத் தேவையில்லை; தூற்றக் கூடாது. ஆனல் பத்திரிகை தவறு செய்தால் வேறொரு பத்திரிகை ஆசிரியர் அதை எடுத்துக்காட்டலாம்; பொய்யை எழுதினுல் அதைப் புட்டுக்காட்டலாம்; திருடி எழுதினுல், திரையைக் கிழித்துக் காட்டலாம்; தற்பெருமையின் உச்சியிலே நின்று கொக்கரித்துத் தப்பான கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தால், அதைச் சுட்டிக் காட்டித் தட்டிக் கேட்கலாம், இவற்றில் தவறில்லை. பத்திரிகை ஆசிரியரின் கடமைகள் இவை

இரா பாலச்சந்திரன் நவாலி

கே: "தீப்பொறி" ஆசிரியர் அந்தனிசில் அவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவரை நான் பார்த்ததில்லை. நேரில் பேசியதுங் கிடையாது. அவருடைய எழுத்தைப் பார்த்து நான் நினைப்பது இது: அவர் "கனியிருப்பக் காய் கவர்" கின்ருர்!

A. பொன்னையா, பருத்தித்துறை.

கே: மனிதன் யாருக்குப் பயப்பட வேண்டும்?

ப: நீதிக்குப் பயப்பட வேண்டும்; நியாயத்திற்குப் பயப்பட வேண்டும்; தன் நெஞ்சிற்குப் பயப்பட வேண்டும்;

ம. கணபதிப்பிள்ளை, அஞ்சல்அலுவலகம், நெடுங்கேணி.

கே: வாழ்க்கையில் வெறுப்படைந்தவர்களுக்கு உங்களால் நல்மதிகூற முடியுமா?

ப: முடியுமே. நமது "மனம்" தான் நம்மை வாழவைக்கின்றது. "மனம் போலவாழ்வு" என்பது மறுக்க முடியாத உண்மை. வாழ்க்கையில் வெறுப்படையக் காரணம் என்ன? நினைத்தது நடக்கவில்லையா? காதலில் ஏமாற்றமா? வறுமைத் தொல்லையா? நடந்ததைச் சொல்லுங்கள்; நடக்க வேண்டியதைச் சொல்வேன்.

எம். எஸ். சித்திஜ[illegible] ஹிங்குளோயா, மாவனல்ல.

கே: ஆசிரியருக்கு மாணவருக்குமிடையில் அன்பு வளர்வது எதனுல்?

ப: ஆசிரியர்களின் வளர்ந்தஉள்ளத்திற்கும் மாணவர்களின் வளரும் உள்ளத்திற்குமிடை 'அறிவு' பாலம் அமைக்க [illegible] 'அன்பு' பயணம் செல்கின்[illegible]

எம். எம். ஷாவ்வி, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

கே: தங்களுக்குச் சோதிடத்தில் நம்பிக்கையுண்டா?

ப; சோதிடத்தில் உண்டு; ஆனால் சோதிடரில் இல்லை. சோதிடம் விஞ்ஞான ரீதியான அறிவுக் கலை. சுகமாக இருந்து சோறு தின்ன விரும்பும் சோதிடர்கள் எதையும் சொல்லி விடுவார்கள். சோதிடர்களை நாம் நம்பினால், அழிவை நோக்கி அதிவிரைவாகச் செல்கிறோம் என்பதுதான் அர்த்தம்!

வி. சதாசிவம்; அரசாங்க அச்சகம், கொழும்பு.

கே; கல்யாணமானவரே! சௌக்கியமா? உங்கள் கண்ணான பொன் மயிலும் சௌக்கியமா?

ப: கட்டைப் பிரமச்சாரியே! நான் சௌக்கியமே! எந்தன் கண்ணான பெண் மயிலும் சௌக்கியமே!

பி. செல்லத்துரை, நீலகாமம் தோட்டம், காவத்தை.

கே: நம் இதயத்தை விட்டு என்றும் நீங்காத பொருள் எது?

ப: இரத்தம்!

க. நடேசன் கிருஷிக இலாகா, பேராதனை.

கே: சுயநலத்தை முன்னிட்டுக் கொள்கை மாறும் பத்திரிகை ஆசிரியர்கட்கு என்ன பரிசு கொடுக்கலாம்?

ப: பிளாஸ்டிக்கில் செய்த "பச்சோந்தி" பொம்மைகளை! பச்சோந்திகள்கூடச் சில சமயம் நிறம் மாறாமல் இருக்கின்றனவே, பத்திரிகை ஆசிரியர்கள் இப்படி மாறலாமா? என்பதைக் குத்திக் காட்ட, இப் பொம்மைகளைப் பரிசளிக்கலாம்!

ச. கிரிவாசன், வெள்ளவத்தை.

கே: மனிதனை எப்போதும் வாட்டி வதைப்பவை எவை?

ப: பிரியமானவர்களின் பிரிவு; நண்பனின் நம்பிக்கைத் துரோகம்; பகைவனின் பரிவு.

செயினுல் ஆப்தீன், "இக்பால் அகம்", கல்முனை.

கே: ஈழத்து எழுத்தாளர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: முதுகு சொறிவதையும் மொட்டைக் கடிதம் எழுதுவதையும் விட்டு, அமைதியாக அடக்கமாக இருந்து எழுத்துப்பணி செய்தால் எதிர்காலம் என்றுமே பிரகாசமாகவே இருக்கும்!

க. ஞா. அல்போன்ஸஸ், கரவெட்டி.

கே: உண்மையிலேயே பிறருக்காகத் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்து கொண்டிருப்பவர்கள் யார்?

ப: மனிதர்களல்ல; மற்றவைகள். நீரில் வாழும் மீனும் நிலத்தில் வாழும் சில மிருகங்களும் தம் வாழ்க்கையைத் 'தியாகம்' செய்துவிட்டால் உலகத்திலுள்ள பெரும்பான்மையோர் தங்கள் வாழ்க்கையைத் 'தியாகம்' செய்யவேண்டி ஏற்படுமே!

நவாலியூர் த. பரமலிங்கம், யாழ்ப்பாணம்.

கே: நீங்கள் பொய் சொல்வது உண்டா?

ப: பொய் சொல்லமாட்டேன். ஆனால் புழுகுவேன், சில சமயம். அதுவும் "புரை தீர்ந்த நன்மை பயக்குமெனில்" தான்!

ஏ. சு. முருகையா, அளவெட்டி.

கே: ராஜாஜி பற்றிய தங்கள் கருத்தென்ன 'பட் பட' அண்ணுவே?

ப: நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்டவர் ராஜாஜி. உலகம் புகழும் மதிநுட்பம் படைத்த அரசியல் ஞானியாக உயர்ந்த அவர் சில சமயம் சொந்த நாடாகிய இந்தியாவே இகழும் அளவிற்கு வெறும் அரசியல் வாதியாக இறங்குவதைத்தான் சகிக்க முடியாதிருக்கின்றது. என்ருலும் அவர் ஆற்றல் மிக்கவர்; அறிவு மிக்கவர்; அனுபவம் மிக்கவர். கடினமான சமயக் கருத்துக்களைக் கன்னித் தமிழில் எழுத— மின்னல் வேகத்தில் சுற்றுப்பிரயாணஞ்செய்து அரசியல் கருத்துக்களை அள்ளி வீச—அணு ஆயுதப் பரீட்சை பற்றி ஆணித்தரமான எதிர்ப்பைக் காட்ட — அவரைத் தேடி வருபவர்களுடனும் அவரே தேடிப் போகின்றவர்களுடனும் அரசியல் முதற்கொண்டு அடுப்படி விஷயம்வரை அலசி ஆராய வேறு எந்தக் கிழவனுல் ஐயா முடியும்?

லோ. சச்சிதாநந்தன், சின்னக் கிண்ணியா.

கே: ''கலைச்செல்வி''யில் இன்னும் புதுப்புது அம்சங்களை இணைக்க நினைக்கிறீர்களா?

ப: இணைக்க நினைப்பதென்ன? இணைத்தேவிட்டாரே, ஆசிரியர். இப்பொழுது அச்சிலிருக்கும் ''கலைச் செல்வி" கலை விழா மலரில் எத்தனையோ புதிய அம்சங்கள் இடம் பெறுகின்றனவே!

சே. த. மகாலிங்கம், நல்லூர் வடக்கு.

கே: இருமனம் கலந்தால் திருமணம் என்கிருர்களே! அது என் வாழ்வில் பொய்த்துவிட்டதே?

ப: தங்கள் கேள்வி தெளிவாக இல்லையே! இரு மனம் கலந்தும் திருமணமாகவில்லையா? அல்லது இருமனம் கலவாமலே திருமணம் நடந்துவிட்டதா? எது எப்படி இருந்தாலும் தங்களை இப்பொழுதுவிதி ''விலக்கி" வைத்துவிட்டது!

இ. பாலசந்திரன், நவாலி

கே: நமக்குத் தோல்வியைத் தருவது எது?

ப: தன்னம்பிக்கையின்மை, முயற்சியின்மை.

S. செல்லையா, டிக்வலே தோட்டம், ஆலி எலே.

கே: முதல் முழக்கம் செய்தவன் வீரபாண்டியக் கட்டப்பொம்மனு? அல்லது புலித்தேவனு?

ப: அலுத்துச் சலித்து, புளித்துக் களைத்துப்போன கேள்வி இது இந்தக் காலத்துக்குப் பொருத்தமான, எங்கள் வாசகர்கட்குப் பயனுள்ள எதையாவது கேட்கலாமே!

என். கே. குலசிங்கம், ''தேன்மலர்'', கல்வியங்காடு.

கே: மனிதனுக்கு மறுபிறப்பு என்று ஒன்று உண்டு என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?

ப: நம்புகிறேன், நிச்சயமாக நம்புகிறேன். முற்பிறவியில் குரங்காக இருந்தவர்கள் இப்பிறப்பில் கட்சி விட்டுக் கட்சிமாறும் அரசியல் வாதிகளாக இருக்கின்ருர்கள்; பிச்சைக்காரராக இருந்தவர்கள் 'எம். பி'யாக இருக்கின்ருர்கள்; யமதூதர்களாக இருந்தவர்கள் கார் டிரைவர்களாகவும் வைத்தியர்களாகவும் பிறக்கின்ருர்கள்!

ப. அப்பாக்குட்டி, துறை நீலாவணை,

கே: "கலைச்செல்வி" கடல் கடந்து தென்னுட்டில் புகுந்தால்...?

ப: எப்போதோ புகுந்துவிட்டாளே! இந்தியாவிலுள்ள முக்கிய பத்திரிகை ஆசிரியர்களும், விமர்சகர்களும் பிரபல எழுத்தாளர்களும், ஈழத்துப் பத்திரிகைகளுள் ''கலைச் செல்வி''யைத்தான் கருத்தூன்றிப்

படிக்கின்றார்கள். ஈழத்து எழுத்தா ளர்கள் இந்தியாவில் அறிமுகமாக விரும்பினால் "கலைச்செல்வி"யில் எழுதுவதைத் தவிர வேறுவழி இல்லையே!

சூரியகெங்கா, உப்புராசி குறுப் உப்புராசி.

கே: தன் காதலி வேறொருவனைக் காதலிப்பதைக் கண்டு முதல் காதல னுக்கு யாதுசெய்யத் தோன்றும்?

ப. நான் அவளைக் கல்யாணம் செய்யாமல்விட்டது எவ்வளவு நல்ல தாகப்போய்விட்டது என்று தன்னைத் தானே பாராட்டத் தோன்றும்.

கே. தனிமையாக இருக்கும் பெண் எதை விரும்புவாள்?

ப: இனிய நினைவுகளை நெஞ்சில் நிறைத்து இரைமீட்க விரும்புவாள்!

ஞானம் மாசிலாமணி, பேராதனை ரோட், கண்டி.

கே. ஏழைகள் என்றால் அவர்கள் யாரையும் காதலிக்கக் கூடாதா?

ப: "காதல்புரி; ஆனால் கல்யா ணத்தை எதிர்பாராதே" என்ற நவீன தத்துவத்தை நம்பினால், இவ் வுலகில் யாரும் யாரையும் காதலிக் கலாம். ஏழைகள்கூட இதற்கு விதி விலக்கல்ல!

க. சுப்பிரமணியம் "தாயகம்" காரைநகர்.

கே. அணைத்தால் அணைப்பது என்ன?

ப பசை! பிசின்! எலிப்பொறி!

"தீவான்" யாழ்ப்பாணம்.

கே. வாயில் வந்தவற்றையெல் லாம் கண்டபடி கதைப்பவன் யார்? பேசுவதை அளவறிந்து பேசுபவன் யார்?

ப: நியாயவாதி; நீதிபதி!

மலரன் "யாழ் அகம்" கொடிகாமம்.

கே: அறிஞர் இங்கர்ஸால் அவர் களுடைய வாழ்க்கை வரலாறு கொள் கைகள் முதலியவற்றைக் சிறிது விளக்க முடியுமா?

ப: தவறான மதக் கொள்கைகளை யும் மூட நம்பிக்கைகளையும் மூர்க்க மாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்த இங்கர்ஸால் 1833ல் ஒரு மதபோத கரின் மகனாகப் பிறந்தார். நியாய வாதியாக இருந்து கொள்ளை கொள் ளையாகச் சம்பாதித்தவர் மனிதாபி மானியாகி அள்ளி அள்ளிக்கொடுத் தார், மனிதன் தன்னம்பிக்கையுடன் மனிதனாக வாழ்ந்து முன்னேற வேண்டும். என்பதுதான் அவரு டைய கொள்கை. மத எதிர்ப்பில் இவ்வளவு தீவிரமாக நில்லாதிருந் தால் அமெரிக்காவின் ஜனாதிபதி யாகக் கூட அவர்வந்திருக்க முடியும்! அவர் இறந்த ஆண்டு 1899.

ச. அனந்தன் சுதுமலை.

கே: இவர்களைப்பற்றி ஒருவார்த் தை! பெண்கள், மாணவர்கள் பக்தர் கள், எழுத்தாளர்கள்?

ப: பெண்கள்வாழ்வின் தூண்கள்; மாணவர்கள் நாளைய சமுதாயத்தின் தூண்கள்; பக்தர்கள் மதத்தின் தூண்கள்; எழுத்தாளர்கள் இத் தகைய தூண்களை உருவாக்கிச் செப் பனிடும் சிற்பிகள்!

க. ஞா அல்போன்ஸஸ், கரவெட்டி

கே: உண்மையிலேயே பிறருக் காகத் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்து கொண்டிருப்பவர்கள் யார்?

ப: மனிதர்களல்ல மற்றவைகள் நீரில் வாழும் மீனும் நிலத்தில் வாழும் சில மிருகங்களும் தன் வாழ்க் கையைத் "தியாகம்" செய்யாதுவிட் டால் உலகத்திலுள்ள பெரும்பான் மையோர் தங்கள் வாழ்கையைத் "தியாகம்" செய்யவேண்டி ஏற் படுமே!

கேள்வி கேட்பவர்கள் வெட்டி ஒட்டி அனுப்பவேண்டிய முக வரி:-

---

தாண்டவக்கோன்
மே/பா. பாலன் வெளியீட்டு நிலையம்
செட்டிகுளம் P. O.

---

# வளருந்தமிழ்

**பாடும் பாப்பா:** (குழந்தைப் பாடல்கள்) ஆசிரியர்: கவிஞர் தணிகை உலகநாதன்; வெளியீடு: சாந்தி நூலகம். 2/122. பிராட்வே. சென்னை-1 விலை ரூபா 2.00.

குழந்தைகளுக்குப் பாடல்கள் என்றால் கரும்பு. எப்போதுமே பாடவும் ஆடவும் விரும்புபவர்கள் அவர்கள் எளிய சொற்கள். இனிய ஓசை இலகுவில் மனனம் செய்யற்கூடிய சந்தம் ஆகியவற்றுடன் எழுதப்பட்ட பாடல்களை எந்நாளும் வரவேற்பார்கள். இத்தகைய பல சுவையான பாடல்களைக் கொண்டதுதான் "பாடும்பாப்பா" என்ற இத் தொகுதி. குழந்தை இலக்கியத்தில் தணியா ஆர்வமுடைய மன்றக் கவிஞர் தணிகை உலகநாதன் அவர்கள் இப்பாடல்களை இயற்றியுள்ளார். பிஞ்சுப் பாடல்கள், பிள்ளைப் பாடல்கள், சிந்தனைப்பாடல்கள், சிரிப்புப்பாடல்கள், கதைப்பாடல்கள் ஆகிய தலைப்புகளில் மொத்தம் ஐம்பது இனிமையான பாடல்கள் இடம்பெற்றுள்ளன "ஒன்றும் ஒன்றும்", ஒன்றே "குலம்" "எல்லோருக்கும் நல்லவன்", "அன்பின் உருவம்"—முதலிய பாடல்கள் இளம் உள்ளங்களில் அறிவையும், அறத்தையும் ஒழுக்கத்தையும் ஒருங்கே ப்தியவைக்கின்றன. "இளமையிற் கல் என்ற மூதுரைக்கிணங்க, குழத்தைப் பருவத்தில் நல்லறிவும் நல்லொழுக்கமும் பதிந்த உள்ளம் படைத்தவர்களே, பிற்காலத்தில் பண்புடைய வாழ்க்கை நடாத்த முடியும் என்பது உலகம் கண்ட உண்மை. அப்படி நல்லொழுக்கத்தைப் புகட்டும் பாடல்கள் இத்தொகுப்பில் அங்கங்கே அமைந்திருப்பது போற்றற்குரியது" என நாமக்கல் கவிஞர் தனது மதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். அழகான அட்டைப்படத்துடனும் உள்ளே கண்ணைக் கவரும் சித்திரங்களுடனும் உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டுள்ள இந் நூல் குழந்தைகட்குப் பரிசளிப்பதற்குச் சிறந்தது.

சி. ச.

**கலைமுரசு;** ஆசிரியர்: கலைத்தொண்டன்; அலுவலகம்; கலையகம்; சம்மாந்துறை; விலை: 15 சதம்.

மட்டக்களப்பு சம்மாந்துறையிலிருந்து வெளியாகும் "கலைமுரசு" மாத இதழின் மூன்றாவது ஏடு கிடைக்கப் பெற்றோம். "வேண்டாமிந்தத் தற்பெருமை" என்ற ஆசிரியத் தலையங்கம் சிந்தனைக்குரியது, கூட்டுக்கல்வி பற்றிய மாஸ்டர் மஜீத்தின் கட்டுரையும் திமிலைக்கண்ணனின் கவிதையும் நன்கு அமைந்துள்ளன, விஷயங்களின் தரத்தை உயர்த்த ஆசிரியர் முயல்வார் என நம்பிக்கொண்டு இப் புதிய பத்திரிகையை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

**இளந்தோமையன்:** ஆசிரியர் மு. சு. சாஜகான்; வெளியீடு தமிழ் இலக்கிய மன்றம், புனித தோமையர் கல்லூரி: மாத்தளை.

மாத்தளை புனித தோமையர் கல்லூரியினரின் இம் முதலாவது தமிழ் வெளியீட்டில் மாணவர்களால் எழுதப்பட்ட கதைகள், கட்டுரைகள். கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

நாவல் கண்ட ராஜமையர் (சு ஸ்ரீ பாஸ்கரன்) இலங்கையின் பண்டைய நீர்ப்பாசனத் திட்டங்கள் (வீ. அருணுசலம்பிள்ளை) முதலிய கட்டுரைகள் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவர்கட்குப் பெரிதும் பயனளிப்பவை, கதை ஒன்று சொல்லுங்கள் அத்தான் (பெ. பூபாலன்) எல்லாம் கணக்கு மயம் (அ. இ இம்மானுவல்) சாவதோ நீதி (பீ. ஏ. வி. பர்ணுந்து) ஆகிய கதைகள் குறிப்பிடக் கூடியவை. நீண்ட காலம் கல்லூரியின் உதவியதிபராக இருந்து சென்ற மாசி மாதம் காலஞ்சென்ற திரு. ஜே. வ. ஞானப்பிரகாசம் அவர்கட்கு இம்மலர் காணிக்கையாக்கப் பட்டுள்ளது. ஆற்றல் மிக்க மாணவர்களையும் அவர்களை நல்வழிப்படுத்தும் மன்றக் காவலாளர்களான திருவாளர்கள் நா. இராசரத்தினம், லோ. ம. செபஸ்தியன்பிள்ளை, வி. கந்தவனம் ஆகியோரையும் மனமாரப் பாராட்டுகின்ருேம்.

வீரமைந்தன், (நாடகச் சிறப்பிதழ்) வெளியீடு: வண்ணை கலைவாணர் நாடக மன்றம், யாழ்ப்பாணம்.

ஈழத்தின் பிரபல நாடகமன்றங்களுள் ஒன்ருகிய வண்ணை கலைவாணர் நாடகமன்றம், தனது "வீரமைந்தன்" நாடகத்தின் பத்தாவது அரங்கேற்றத்தை யொட்டி இச் சிறப்பிதழை வெளியிட்டுள்ளது. "தேவன் –யாழ்ப்பாணம்" எழுதிய "நடிகனும் வசனமும்" நடிகர்கள் மட்டுமல்ல, ரசிகர்களும் படிக்க வேண்டிய கட்டுரை, கவிச்சக்கரவர்த்தி கம்பனின் நாடக ஆற்றலை ரசித்து ரசித்து எழுதுகின்ருர் "ஈழத்துறைதவன்" தனது கட்டுரையில். சிறந்த நடிகனுக வருவதற்குக் கலையரசு கூறும் ஆலோசனைகளும் ஏ. சுப்பையா அவர்களின் "அபிநயம்" பற்றிய விளக்கமும் மலரிலுள. நாடகமன்றம் பற்றிய செய்திகள், முக்கிய நடிகர்களின் புகைப்படங்கள் முதலியவற்றுடன் எளிமையும் கவர்ச்சியும் சேரத் தயாரிக்கப்பட்டிருக்கும் இம் மலர் நாடகாபிமானிகளிடையே ஒருவித புத்துணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.


## கலை விழா

அடுத்த மாதம் வவுனியா நகரில் நடைபெறவிருக்கும் கலைச்செல்வி கலைவிழாவிற்கு வரவிரும்பும் வெளியூர் அன்பர்கள் தயவுசெய்து உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்க. இலவச உணவு வசதிகள் செய்துகொடுப்போம்.

**பாலன் வெளியீட்டு நிலையம்**

செட்டிகுளம். P. O. இலங்கை.

ஈடு மீட்கவா! வீடு கட்டவா!!

சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும்

# இலங்காநிதி லிமிற்றெட்

நவீன சேமிப்பிற் சேருங்கள்

இலாபத்துடன் கொடுக்கும் தொகை

| மாதவீதம் கட்டுவது | 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
|---|---|---|---|
| 10 ரூபா | 330 ரூபா | 750 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

மேற்குறித்த இலாபத்துடன்

ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு

அதிட்ட இலாபமும் கொடுக்கப்படும்

கட்டுபவர் இறந்தால் உரித்தாளிக்கு

கட்டிய பணத்துடன் கால பங்கும் கொடுக்கப்படும்.

மறுவிபரத்திற்கு:

## இலங்கா நிதி லிமிற்றெட்

தலைமைக்கந்தோர்:

**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்**

கிளை;

*284, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை*



# வீர

இலங்கையில், அதுவும் யாழ்ப்பாணத்தில் ஒரு நாடகத்தைத் தயாரித்து அதை வெற்றிகரமாக அரங்கேற்றுவதென்பது உண்மையிலேயே செயற்கரிய செய்கைகளுள் ஒன்றுதான்! இதற்குரிய காரணங்கள் பல' உண்மையான திறமை படைத்த நடிகர்கள் அங்கங்கே பரந்து வாழ்கின்றார்கள். அவர்கள் அனை

தமிழரசன் :
க. மாசிலாமணி

வரையும் ஒன்றுசேர்த்து நாடகம் தயாரிப்பது கஷ்டம் 'கலைத்துவக் காய்ச்சல்' காரணமாகச் சில நடிகர்களை ஒன்று சேர்க்கவே முடிவதில்லை: கலைஞர்களுள் பெரும்பாலோர் பொருளாதார வசதி அற்றவர்கள். ஏதோ ஒரு மாதிரி நாடகத்தைத் தயாரித்து அரங்கேற்றலாமென்றால், சுவரொட்டி ஒட்டுவதுமுதல் "டிக்கட்" விற்பதுவரை எல்லா வேலைகளையும் நடிகர்களே செய்ய வேண்டும், இந்த இலட்சணத்தில், நாடகக்கலை வளருமா?



உருத்திரன் :
க. துரைசிங்கம்

வளர்ந்துதான் வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். தடைகள் பல கடந்து நல்ல சில நாடகங்கள் அவ்வப்போது அரங்கேறித்தான் வருகின்றன. நமது நாடக பாரம்பரியத்தை நிலைநாட்டவேண்டும். இங்கேயும் நல்ல நடிகர்கள் இருக்கின்றார்கள் என்ற உண்மையை மற்றையோர் உணரும்படி செய்தல்வேண்டும் என்ற நோக்கமுடைய நாடகாபிமானிகளின் கூட்டு

# மைந்தன்

முயற்சியால் இத்தகைய நாட கங்கள் அரங்கேறுகின்றன.

விரல்விட்டு எண்ணக் கூடிய நல்ல நாடகங்களுள் ஒன்று சென்றமாதம் 17-ந் திகதி யாழ்ப்பாண மாநகர சபை மண்டபத்தில் பத்தா வது தடவையாக மேடை

வீரசேனர்:
க. நா. கணபதிப்பிள்ளை

யிடப்பட்ட "வீரமைந்தன்". ஒருதடவை மேடையிடுவதே பகீரதப்பிரயத்தனமாக இரு க்கும்போது பத்தாவது தட வையாக வெற்றிகரமாக மே டையிடுவது மகாத்தான சா தனையல்லவா?

ஈழத் தமிழரின் இன் றைய நிலையைச் சுட்டிக்கா ட்டி உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் வகையில் கதையும் வசனமும் அமைந்திருந்தன, ஒவ்வொருவரும் தத்தமது பாத்திரத்தை உணர்ந்து நன் ருக நடித்தனர். அரங்க அமைப்பும் காட்சி அலங் காரமும் மிக மிகக் கவர்ச்சி யாக இருந்தன.

மதிவாணர்:
இ. ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி

கலைச்செல்வி கொலுவிருக் கும் கலைவாணர் நாடகமன் றமே! உன் அரிய பணிக் காக உன்னைப் பாராட்டுகின் ரோம்: திறமையான நடி கர்களை ஒன்றுசேர்த்து ஒற்று மையுடனும் கட்டுப்பாட்டுட னும் உன்னை இயங்கவைக் கும் நடிகமணி சி. த. அரசு அவர்களை உன் தலைவராகப் பெற்றதற்காக உன்னைப் பாராட்டுகின்ருேம். தலை சிறந்த இந்திய நாடகமன்





றங்களைப்போல் கவர்ச்சியான செட்டிங்ஸ்''ஸுடன் சிறப்பான முறையில் நாடகங்களை அரங்கேற்ற உன்னால்முடியும் என்பதற்காக உன்னைப் பாராட்டுகின்

விந்தியன் :
இ பறதணம்

றோம். உன் சக்தியை நீ உணர்ந்து 'வீரமைந்த''னை குறைந்தது 100 தடவையாவது இலங்கை முழுவதும் அரங்கேற்றுவாய் என எதிர் பார்க்கின்றோம்.

— கலைச்செல்வி

தமது நாடக விமர்ஸனங்கள் ''கலைச்செல்வி''யில் இடம்பெறவேண்டும் என விரும்புவோர், நாடகம் அரங்கேற்றுவதற்கு ஒரு வாரத்திற்குமுன் எமக்குக் கிடைக்கும்படி இரண்டு நுழைவுச் சீட்டுக்களை அனுப்பவேண்டும்.




விசே... செய்தி!

நவீன வசதிகளுடன் கூடிய எமது அச்சகத்தில்

வா மொழி

( மே. வனாஹரி )

எழுத்துக்கள் வாங்கியுள்ளோம்.

ஸமஸ்கிருத நூல்களும் வினாத் தாள்களும்

அச்சிட விரும்புவோர் எங்களைக் கலந்துகொள்க.

ஆசீர்வாத அச்சகம்

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 274.


இப்பத்திரிகை செட்டிகுளம் பாலன் வெளியீட்டு நிலையத்தாரால் சுன்னாகம் கலாதேவி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.